
# திருக்கோயில்

ஜூலை 1986 விலை ரூ. 2-00

அருள்மிகு
மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்
மதுரை



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைச் சார்ந்த புதுமண்டபம் அருகில் பாதாள அறை ஒன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் பாதாள அறையைப் பார்வையிடுகிறார்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திருமிகு எஸ். முத்துசாமி அவர்களும், அறநிலையத்துறை ஆணையர் திரு. க. சுந்தரமூர்த்தி ஐ.ஏ.எஸ் அவர்களும் உடன் உள்ளனர்.

| முகப்பு |

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள அன்னை அருள்மிகு மீனாட்சியும் சுந்தரேஸ்வரரும் இவ்விதழ் முகப்பில் அமர்ந்து அருள் பாலிக்கின்றனர்.

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை: 28 | திருவள்ளுவர் ஆண்டு 2017 அட்சய ஆண்டு ஆடித்திங்கள் ஜூலை 1986 விலை ரூ. 2-00 | மணி: 7

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
**ஆணையர் அவர்கள்**
**அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை-600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா ரூ 24.00 மட்டும்.**

புதிய சந்தாதாரர்கள் ஒரு ஆண்டிற்கு ரூ. 24/- எனக் கணக்கிட்டு எத்தனை ஆண்டுகளுக்குச் சந்தா கட்ட விரும்பினாலும் அத்தனை ஆண்டுகளுக்குப் பணம் அனுப்பிவைக்கலாம். அவர்கள் எப்பொழுது பணம் அனுப்பினாலும் பணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்தத் திங்களிலிருந்து அவர்கள் அனுப்பிய காலம் முடிய ''திருக்கோயில்'' இதழ் அனுப்பிவைக்கப்படும் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

## பொருளடக்கம்

ஆலயங்கள் சமுதாய நல நிலையங்கள்
கண்ணகிக் கோயில்
—மாண்புமிகு அமைச்சர் திருமிகு இராம. வீரப்பன் அவர்கள்

திருமூலநாயனார்
—அ. செவ்வேள்

கரையேறவிட்டநகரில் அப்பர் கரையேறிய வரலாற்றுப் பெருவிழா
—'நிறைமதி' (தொகுப்பு)


அம்மன்குடி ஸ்ரீ துர்கை
—கே. வி. கிருஷ்ணமூர்த்தி

திருக்கழுக்குன்றம்
—பூசை ஆ. நமச்சிவாயம்

எண்வகை யோகம்
—டாக்டர் பொற்கோ

பாரதப் போரில் பார்த்தசாரதி
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்



# ஆலயங்கள் சமுதாயநல நிலையங்கள்

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்
திருமிகு **இராம. வீரப்பன்** அவர்கள்

தமிழகத்தின் கலை, சமய உணர்வுகளை வெளிப்படுத்தும் பண்பாட்டு நிலையங்களாகத் தமிழகத் திருக்கோயில்கள் விளங்கி வந்திருக்கின்றன. மக்களுக்குத் தலைவனாகிய மன்னவனைப் போற்றியதுபோல, படைப்புக்குத் தலைவனாக இறைவனைக் கருதியதால், அவனை மன்னர் மன்னன் என்றும், கோவேந்தன் என்றும் கொண்டாடியதன் விளைவாக, கோவேந்தனுடைய இல்லம் என்னும் பொருளில் மன்னவர் அரண்மனைகளுக்கு வழங்கிய பெயர், ''திருக்கோயில்'' என்றே அருள் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது.

வானுயர்ந்த கோபுரங்களும், வனப்பு உயர்ந்த மாமதில்களும், சீருயர்ந்த தேர்களும், தூய திருக்குளங்களும் கோயில் உடைமைகளாகப் போற்றப்பட்டன. எழில் மிகுந்த இக்கோயில்களினால் தமிழகத்தின் புகழ் உலகெங்கும் பரவியிருக்கிறது. கோயில்கள் பழம்பெரும் நாகரீகக் கூறுகளையும்



மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பொதுவிருந்து விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச்செம்மல் டாக்டர் **எம்.ஜி.ஆர்.** அவர்களும், மாண்புமிகு அறநிலைத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்களும் கலந்துகொண்ட போது எடுக்கப்பட்ட படம்.

## ஆலயங்களின் அறப்பணியைப் பற்றி
## மாண்புமிகு டாக்டர் தமிழக முதல்வர்.

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக் கோவில்,
மருதமலை — கோயம்புத்தூர்.

---

பக்தர், நலம் பேண, நல்லோர்க்கம் வாரா
நற்பணிகள் செயல்பட அமைக்கப்பட்டுள்ள
உயர்ந்த மலையில் அமைந்துள்ள
திருக்கோயிலைக் காணவும் வளம்
பெறாமலிருந்தும் வாய்ப்பினைப் பெற்ற நான்
மகிழ்ச்சியுற்றேன் [illegible]
இந்தக் கோயிலுக்கு மேலும் [illegible]
பக்தர்கள் செல்ல எல்லா வழிகளிலும்
வசதியும் தன்மையும் பெற — ..
திரு. ம. ம. அ. சின்னப்பத் தேவர் அவர்
களுக்கும் அவர்தம் துணைவர்களுக்கும்
எல்லா நலனும் கிடைக்க..
ஆண்டவனும் என்றும் அருள் புரிவாராக
கோயில் நிர்வாகிகள் [illegible]
செயல்படுவது இதுபோல பாராட்டுக்குரியது
[illegible]
தொடர்ந்து செயலாற்றுக [illegible].

அன்பன்
சி. ந. அண்ணாதுரை
10-10-67

பண்பாட்டு நலன்களையும் பலவகையாக்ச் சுட்டிக் காட்டுகின்றன. பிரித்தானிய ஆங்கிலக் கலைக் களஞ்சியத்தில் ''கோயில் கட்டும் பெருங் கலைத் திறம் வாய்ந்தவர் தமிழர்'' என்று தமிழினத்தைப் பற்றிக் குறித்திருப்பது நமக்குப் பெருமை தருவ தாகும். மேலை நாட்டார் வியந்து போற்றும் கிரேக்கக் கலை வெறும் பொருள் நிலையில் மட்டும் நிற்பது; தமிழ்நாட்டின் சிற்பக் கலையும் கட்டடக் கலையும் அந்த நிலையினும் மிக உயர்ந்து ஆன்மீக நிலையின் அடிப்படையில் எழுந்தது என்று அவர் களே போற்றுகிறார்கள்.



ஆலய மேம்பாட்டுத் திட்டத்தின் தொடக்க விழா.

காலப்போக்கில் அறிவியல் வளர்ச்சியால் அறி வுத் தெளிவும், புதியன காணும் ஆர்வமும் மக்க ளிடையே பிறந்துள்ளன. எனினும், பண்டைக் காலத்து மக்கள் கொண்டிருந்த கோட்பாடுகள், சில நம்பிக்கைகளின் அடிப்படையில் பிறந்தன என் றாலும், அந்நம்பிக்கைகள் சமுதாய நல்வாழ்வுக்கு உரம் ஊட்டவல்ல துணையாகவும் அமைந்திருந் தன என்பதை நாம் அறவே மறுப்பதற்கு இல்லை. ஆலயங்கட்கு வழிபாடு கருதிச் செல்பவர்களைப் போலவே சிற்பக் கலையின் சீர்த்தியைக் கண்டு வியக்கச் சென்று வருபவர்களும் உண்டு.

சேலத்தில் ஒரு திருக்கோயிலின், முன் மண்டபத் தில் காட்சி தருகின்ற நெடிய திருமேனிப் படிவத்தை இராமர் வடிவம் என்று பலரும் கருதியிருந்தனர். ஆனால், ஈரோட்டைச் சார்ந்த பெரும் புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டர் என்பவர் அது வல்வில் ஓரியின் திருமேனி என்றும், வரலாற்றை இங்ஙனம் ஆலயத்துள் வாழ்வித்தனர் என்றும் அவர் சொல் லித் தாம் அறிந்ததாக மாண்புமிகு நீதிபதி செங் கோட்டு வேலன் அவர்கள் ஒருமுறை குறிப்பிட் டார்கள். இதனால் இறையுணர்வோடு, வரலாற்று உணர்வையும் ஊட்டும் கலை நிலையங்களாக ஆலயங்கள் விளங்குதலை அறியலாம். நம்மைக் காட்டிலும், அயல் நாட்டிலிருந்து வரும் பெரு மக்கள் பலர், நம் திருக்கோயில்களின் அமைப்பை யும், அழகையும் மகிழ்ந்து பாராட்டுவதோடு, ஆலயச் சிற்பங்களைப் பற்றிய நுணுக்கமான செய்திகளையும் ஆர்வத்தோடு கேட்கின்றனர்.

பழங்காலத்தில் பொது நிலையங்கள் என் பவை மிகச் சிலவாகத்தான் இருந்திருக்கவேண்டும். அவற்றுள் திருக்கோயில் மக்கள் வாழ்வின் அனைத்து நிலைகளையும் தழுவிய கலை, பண்பாடு, நாக ரிக மையங்களாகவும் திகழ்ந்தது. இன்று நம்மை வியப்பில் ஆழ்த்தும் சிற்பக்கலைத் திறத்தின் ஊற் றுக் கண்களாகவே ஆலயங்கள் திகழ்கின்றன. இக் கருத்திலேயே ''கோயில் இல்லாத ஊரில் குடி யிருக்க வேண்டா'' என்று முன்னோர்கள் குறித்த வர் போலும்.

இக்காலத்துக் கல்லூரிகளும் பல்கலைக்கழகங் களும் ஏற்படாத முன்னர், கோயில்கள்தாம், கல் விக்கும் கலை வளர்ச்சிக்கும் பெருந் தொண்டு புரிந் துள்ளன. கோயில்களில் உள்ள மண்டபங்கள் பலவற் றில் ,கல்வியும் கலைகளும் பயிற்றுவிக்கப் பெற்றன. கோயில்களில் நடன மண்டபம், இசை மண்டபம் புராணப் படன மண்டபம், வியாகரண மண்டபம் தருக்க மண்டபம் முதலியன இருந்தன. இருக்கின் றன. அவ்வவற்றில் ,அந்தந்தக் கல்வியும் கலை களும் பயிலப் பெற்றன. 'சரசுவதி பண்டாரம்' என்றும் 'திருக்கைக்கோட்டி' என்றும் பெயர்பெற்றி ருந்த ஆலயப் பகுதிகளில், சிறந்த நூலகங்கள் அமைந்து பணியாற்றி வந்தன. பழைய நூல்களைப் பாதுகாத்து, அந்நூல்களைப் பிரதிகள் செய்து படிக்க விரும்புவோர்க்கு அந்நூல்களைக் கொடுத்து வாங்கியும் ,கோயில்கள் கல்வி வளர்ச்சிக்குப் பெருந் தொண்டுகள் புரிந்துள்ளன.

கோயில்களில், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் முதலிய எல்லாக் கலைகளும் போற்றி ஆதரித்து வளர்க்கப்பெற்றன. பரிபாடல் என்னும் சங்க நூல், திருப்பரங்குன்றம் கோயிற் சுவர்களில் சூரியன், சந்திரன், மன்மதன், இரதி, அகலிகை-கௌதமர் வரலாறு முதலிய பலப் பல அழ கோவியங்கள் தீட்டப்பெற்றிருந்ததைக் கூறுகின் றது.

மாமல்லபுரம் தேர்க்கோயில்களிலும், தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழபுரம்கோயில், திரிபுவனம், தாராசுரம், இராமேசுவரம், தாரமங்கலம், பேரூர், சிதம்பரம், திருவரங்கம், திருப்பெருந்துறை, திருவண்ணாமலை முதலான தலங்களிலுள்ள கோயில்களிலும் உள்ள சிற்பங் களால், கோயில்கள் சிற்பக்கலைக்கு அளித்துள்ள பேராதரவு புலனாகின்றது.

நுண் கலைகளில் தலைசிறந்த இசைக்கலை, கோயில்களில் பெரிதும் தழைத்தோங்கி வளர்ந்து



வந்தது. கொட்டி, மத்தளம், முரலியம், வங்கியம், உடுக்கை, சங்கு முதலிய எண்ணற்ற வகையான வாத்தியங்களை வாசிப்பவர்கள் அங்கே நியமிக்கப் பெற்றிருந்தனர். வேதபாராயணம் செய்பவர்களும், திருமுறை ஓதுபவர்களும், திவ்வியப் பிரபந்தம் இசைப்பவர்களும், நூல் இயற்றும் கவிஞர்களும், சொற்பொழிவுகள் ஆற்றும் புலவர்களும் ஆலயங்களால் ஆதரிக்கப்பெற்றனர்.


நாட்டின் அரசில் எத்தனையோ குழப்பங்கள் மலிந்திருந்த காலத்தும், நாசகாலத்திலும் கோயில் ஆதரவில் வளர்ந்த பண்டைக் காலத்துத் தமிழிசை, சிலப்பதிகார இசை, சம்பந்தர் போன்றோரது பணியால் தொடர்ந்து மக்களிடையே உணர்வோடு வளர்ந்து சமீபகாலத்தில் கர்நாடக இசை என்ற புதுப் பெயரில் வளர்வதற்கும் கோயில்கள் இடம் கொடுத்தன. கோயில் இருந்திராவிட்டால் இன்று யாரும் கர்நாடக இசை என்றோ பரத நாட்டியம் என்றோ பேச இடமிராது.

கோயில்களில் நடனக் கலையும், நாடகக் கலையும் போற்றி வளர்க்கப்பெற்றன. பல கோயில்களில் நடன மண்டபங்கள் இருந்து வந்தன. தஞ்சைப் பெரிய கோயிலில், 400 நடனப் பெண்கள் ''தளிப்பெண்டுகள்'' என்று சொல்லப் பெற்றோர் இராசராச சோழனால் அமர்த்தப்பெற்றனர் என்றும் அவர்களுக்கு நான்கு வீதிகளின் இரு புறங்களிலும் தனித்தனி 400 வீடுகள் கட்டித் தரப் பெற்றன என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

''மின்னொடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல்செய்நாடக சாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சுரம்''

என்று, கருவூர்த்தேவர் தஞ்சைக் கோயிலிலிருந்த நடன சாலையினையும், நாடக சாலையினையும் குறிப்பிட்டிருத்தல் காணலாம். நாடகம், நடனம், நிருத்தியம், நிருத்தம், கவுத்துவம் முதலிய கலைகள் பலவும் கோயில்களில் வளர்க்கப்பெற்றன.

சிதம்பரம், திருவண்ணாமலை, தஞ்சாவூர் முதலிய கோயில்களில் நடனக்கலையின் 108 கரண வகைகள் சிற்பமாக அழகுற வடிக்கப்பெற்றுள்ளன. கோயில்களில், இசையிலும்நாடகத்திலும் வல்ல கலைஞர்களான நாடக மாராயன் ,சாக்கைக் கூத்தன், கானம்பாடி, வாத்தியமாராயன் முதலியவர்கள் ஆதரிக்கப்பெற்றனர். தஞ்சைப் பெரிய கோயிலில் இராசராசேச்வர நாடகம், பிற்காலத்தில் சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம் முதலியனவும், திருப்பாதிரிப்புலியூரில் பூம்புலியூர் நாடகம் போன்றனவும், மற்றும் பக்தியை வளர்க்கின்ற கடவுள் கதைகளும், அடியவர்களின் வரலாறுகளும் கோயில்களில் நடிக்கப்பெற்று வந்தன.



திருவாரூர் தேர்த் திருவிழாவில் மாண்புமிகு ஆர்.எம்.வீ.

பூத்தொடுப்பது ஒரு கலை. கோயில்தோறும் நந்தவனமும் மாலை கட்டுவோரும் உண்டு. எத்தனை பூக்காரத்தெரு, மாலை கட்டித் தெருக்கள்? தார், கண்ணி, மாலை, பிணையல், தொடையல், சரம் என்று எத்தனை வகைகள்? நம் நாட்டைத் தவிர உலகில் வேறெங்கும் இத்தனை பிரிவு இல்லை.

பண்டைக் காலத்தில் கோயில்களே நீதிமன்றங்களின் பணிகளைச் செய்து வந்தன. பொது மக்களின் குறை முறையீடுகளைக் கேட்டு விசாரித்து ஊர்ப்பெருமக்கள் கோயில்களிலேயே நீதி வழங்கி வந்தனர். திருவெண்ணெய் நல்லூர் கோயில், திருவாலங்காட்டுக் கோயில் முதலியவற்றில் இன்னும் அத்தகைய வழக்கு மண்டபங்கள் இருத்தலைக் காணலாம்.

இன்றைய சமுதாயத்தில், மக்களுக்கு வருகின்ற பலவகைப் பிணிகளையும் தீர்க்கின்ற மருத்துவமனைகள், ஆங்காங்குப் பணிபுரிந்துவருகின்றன. பண்டைக்காலத்தில் இத்தகைய மருத்துவமனைகள் பல, கோயில்களின் ஆதரவிலேயே நடைபெற்று வந்தன. காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருமுக்கூடல் என்னும் ஊரில் 'வீர சோழன் ஆதுலர் சாலை' என்னும் மருத்துவமனை இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இவ்வாறேதிருவாவடுதுறைக் கோயிலின் சார்பிலும் சிறந்ததொரு மருத்துவமனை இருந்ததென்று கல்வெட்டுகளால் தெரிகின்றன. கோயில்களின் சார்பில் சித்தமருத்துவக் கலைஞர்கள், பொதுமக்களின் பலவகை நோய்களுக்கும் மருத்துவம் புரிந்து நோய் தீர்த்து வந்தனர்.




திருக்கோயில் தூய்மைப் பராமரிப்புப் பணியை மாண்புமிகு ஆர்.எம்.வீ. தொடக்கி வைக்கிறார்.

இன்று உடல் ஊனமுற்றோர் சேவை அரசின் சீரிய பணிகளுள் ஒன்று. இதைக் கோயில்கள் செய்தன. விழுப்புரத்திற்கு அருகில் உள்ள திருவாமாத்

தூர் கோயிலில் ,குருடர், பதினாறு பேருக்கு உணவு உறையுள் தந்து, கோயிலில் பதிகம் பாடப் பயிற்சி அளித்து அவ்வேலையில் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு வழிகாட்டித்துணை புரிய இருவர் நியமிக்கப்பெற்றிருந்தனர். இப்பதினெண்மருக்கும் உணவு முதலியவற்றுக்கான திட்டங்கள் செய்யப் பெற்றிருந்ததை ஒரு கல்வெட்டு விரிவாகக் கூறுகின்றது.

தமிழகக் கோயில்களில் எளிய மக்களுக்கும், அநாதைகளுக்கும் யாத்திரிகர்களுக்கும் ஒவ்வொரு நாளும் உணவளிக்கப்பெற்றது. அதற்கென்று கோயில்களில் அறச்சாலைகள் பல அமைந்து பணி புரிந்து வந்தன.



மதுரையில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் பொதுவிருந்துவிழா.

இக்காலத்தில் பெரும்பாலான ஊர்களில், நிதி நிலையங்களாகிய வங்கிகள் பல அமைந்து, சமுதாய மக்களின் பொருளாதாரச் செழிப்பிற்கு உதவி புரிந்து வருகின்றன. இது போலவே, பண்டைக் காலத்தில் கோயில்கள் நிதி நிலையங்களாக விளங்கி மக்கட் சமுதாய நலனுக்குரிய செயல்களைப் புரிந்து வந்தன. கோயிலுக்கு வரும் நன்கொடைகள், அறக் கட்டளைகள் முதலியவற்றைப் பெறவும், பொருள் தேவைப்படும் ஏழை மக்களுக்கு ஓர் அளவான வட்டிக்குக் கடன்தரவும் இவற்றின் தொடர்பான பத்திரங்களையும் ஆவணங்களையும் பாதுகாக்கவும் பலவகை ஏற்பாடுகள் கோயில்களில் நிலவி இருந்தன.

நாட்டில் போதிய மழையின்மையாலும் விளைவு இன்மையாலும் பஞ்ச நிலைமை ஏற்பட்டால், இக்காலத்தில் அரசாங்கம் பலவகைப் பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ளுகின்றன. இது போன்ற பஞ்ச நிவாரணப் பணிகளில், கோயில்களும் ஈடுபட்டுப் பொது மக்களுக்கு தொண்டாற்றியுள்ளன. ஒவ்வொரு சிற்றூரிலும் அறுவடைக் காலத்தில் ஓரளவு நெல் தண்டல் செய்து ஒதுக்கிப் பாதுகாத்து வைக்கப் பெற்றது. பஞ்சம் ஏற்பட்டால் அந்நெல் பொதுமக்களுக்குக் கோயில் மூலம் முறையாக வழங்கப் பெற்றது. அறுவடையாகும் நெல்லைச் சேர்த்தல், பாதுகாத்தல், மேற்பார்வையிடுதல், பஞ்ச காலத்தில் குடி மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தல் முதலிய வேலைகளைக் கோயில்களின் சார்பில், 'பஞ்சவார வாரியத்தார்' என்னும் குழுவினர் கவனித்து வந்தனர்.

''அல்லர் கண்டத்து அண்டர்பிரான்
அருளால் பெற்ற படிக்காசு,
பல்லாறு இயன்ற வளம் பெருகப்
பரமன் அடியார் ஆனார்கள்,
எல்லாம் எய்தி எண்மைஎன
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார்.
துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்''.

என்று பெரியபுராணத்தில், சேக்கிழார் ஒரு சமயம் திருவீழிமிழலையில் கொடிய பஞ்சம் ஏற்பட்ட போது, திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் அவ்வூர் மக்கள் எல்லோருக்கும் சோறு வழங்கிப் பஞ்ச நிவாரணப் பணி புரிந்தமையினைக் கூறியிருத்தல் இங்கு நாம் கருதத்தக்கது.


இந்நாளில், அம்மை முதலிய கொள்ளை நோய்கள் ஏற்பட்டால், அரசாங்கம் விரைந்து நடவடிக்கைகளை எடுத்து, இந்நோய்களைப் போக்கி மக்களைக் காப்பாற்ற முனைகின்றது. இத்தகைய பணிகள் பண்டைக்காலத்தில் நம் கோயில்களின் மூலம் செய்யப் பெற்று வந்தன. திருச்செங்கோடு என்னும் திருக்கொடிமாடச் செங்குன்றூர்த் தலத்திற்குத் திருஞானசம்பந்தர் சென்றபொழுது அப்பக்கங்களில் எல்லாம் நளிர்சுரம் என்னும் கொடிய காய்ச்சல் ஏற்பட்டது என்றும், அதனைத் திருஞானசம்பந்தர் இறைவனைப் பாடித் தொழுது தீர்த்தருளினார் என்றும் பெரிய புராணம் கூறுதல், கோயில்கள் ஆற்றி வந்த பிணி தீர்ப்புப் பணியினை உணர்த்துகின்றது.

இவற்றையெல்லாம் கருதினால், நம் தமிழ் நாட்டில் பழங்காலத்தில் கோயில்களே, கல்வி நிலையங்களாக விளங்கின; கலை வளர்க்கும் கழகங்களாகத் திகழ்ந்தன. ஏழை எளியவர்களை உணவளித்துப் பாதுகாக்கும் அறச்சாலைகளாக அமைந்திருந்தன; மருத்துவ மனைகளாகப் பணி புரிந்தன. தொழில் தரும் நிறுவனங்களாகத் தொண்டாற்றின. பொது மக்களுக்குப் பொருள் கொடுத்தும் வாங்கியும் உதவி புரியும் நிதி நிலையங்களாக இயங்கின என்னும் உண்மைகளை நாம் நன்கு உணரலாம். சுருங்கக் கூறினால், நம் கோயில்கள் தொன்று தொட்டே சமுதாய நன்மை குறித்துப் பற்பல துறைகளிலும் தொண்டாற்றி வந்துள்ளன எனத் துணிந்து கூறலாம்.

இங்ஙனம் நம் தமிழகத்தில் சமய இயல், சமுதாய இயல், கலையியல், கல்வியியல், பண்பாட்டியல், பொருளியல், நாகரீக இயல் முதலிய பல்வேறு துறைகளிலும் தொடர்பு கொண்டு, மக்கட் சமுதாயத்திற்கு நலன்கள் பலவும் செய்து வருகின்ற கோயில்களே உண்மையில் நமது 'சமுதாய நல நிலையங்கள்' ஆகும் எனக் கூறலாம். இத்துணைச் சிறப்பு மிக்க நமது கோயில்களைக் கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது, தமிழ் மக்களாகிய நம் எல்லோருக்கும் உரிய தலையாய பெருங் கடமையாகும்.

# கண்ணகிக் கோயில்

கண்ணகிக் கோயில் என்பது நீண்ட காலமாக வரலாற்றில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சியாகும். மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நேரத்திலும் தமிழக எல்லைக்குள்தான் இந்த பகுதி இருந்தது என்பது தெளிவாக ஆவணங்கள் மூலம் தெரிகிறது.



புதுப்பிக்கப் படவேண்டிய கண்ணகிக் கோயில்

வில்லங்கம் எப்போது வந்தது என்றால் இந்தக் கோயில் கண்டுபிடிக்கப்பட்ட 1971ம் ஆண்டு இதை புதுப்பிக்க வேண்டும் என்ற உணர்வோடு முன்னாள் முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி கேரள அரசுக்கு கடிதம் எழுதியபோதுதான்.

அந்த கடிதத்தைப் பார்த்ததும் கேரள அரசு விழித்துக் கொண்டு அனுமதி தருவது பற்றி பரிசீலிக்கிறோம். கோயில் எங்கள் எல்லையில் இருக்கிறது என்று கூறியது.

நமது முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் ஆவணங்களையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து இந்தக் கோயில் தமிழக எல்லைக்குள் வண்ணாத்திப் பாறை ரிசர்வ் வன பகுதிக்குள்தான் இருக்கிறது என்று எழுதி நாங்களே புதுப்பித்துக் கொள்கிறோம் என்றபோது கேரள அரசு வேகமாக ஆட்சேபம் தெரிவித்தது.

உடனடியாக நமது முதல் அமைச்சர், பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடம் இந்த கோவிலில் நமக்குள்ள உரிமையை விளக்கினார். இரு மாநில தொல்பொருள் அதிகாரிகள், எல்லையை நிர்ணயிக்கும் அதிகாரிகள் முதலில் பேசட்டும்; பிறகு, அரசுகள் பேசலாம் என்று கூறப்பட்டது.

இதற்கிடையில் நமது அதிகாரிகள் எல்லைகளை திருத்தி அமைத்ததாகவும் நில அளவைக் கற்களை கேரள மாநிலத்திற்குள் நட்டு இருப்பதாகவும் கேரள அரசு கூறிய குற்றச்சாட்டை தமிழக அரசு மறுத்தது.


இந்தப் பிரச்சினை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கு முதல் அமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள். அதில் கண்ணகிக் கோவில் தமிழ் நாட்டின் எல்லையில் உள்ளதால் கேரள அரசின் தலையீட்டை நிறுத்தி தமிழ் மக்கள் இந்த கோவிலில் வழிபாடு செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் திருவிழா காலத்தில் கொந்தளிப்பும் பதட்டமும் அதிகமாகி வருகிறது.

இந்த கோவிலைப் போய் பார்த்தால் அங்கு சிலை இல்லை. அந்த இடத்தைத் தமிழ் நாட்டை சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் கண்டு பிடித்தபோது ஊனமுற்ற ஒரு சிலை இருந்ததாக கூறினார். அந்த சிலை அவரிடம் தான் இருக்கிறது.

மிகுந்த காற்றும், மழையும் இருந்த ஒரு நேரத்தில் நான் அந்த கோயிலுக்குச் சென்று பார்த்தேன்.

நமது மக்கள் விரும்பிக் கேட்டுக்கொண்டதற்கிணங்கத்தான் அங்குப் பக்கத்திலேயே கண்ணகிக்கு ஒரு புதிய கோயில் கட்ட அரசு முடிவெடுத்துள்ளது.



மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்கள் கண்ணகிக் கோயிலைப் பார்வையிடுகிறார்.
(பழையபடம்)

இந்தக் கோவிலைக் கட்டுவதற்கும் ஏற்கனவே உள்ள கண்ணகி கோவிலை திரும்ப பெறுவதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அந்த உரிமையை மீண்டும் பெற பாடுபடுவோம். அதைக் கைவிடவில்லை.

—மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு ஆர். எம். வீ. அவர்கள் சட்டமன்றத்தில் தெரிவித்த தகவல்.

# திருமூல நாயனார்

அ. செவ்வேள், சென்னை.

சிவயோகியும் சித்தருமாகிய திருமூலர் இன்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராகக் கணக்கிடப்படுகிறார். அவர் தோன்றிய காலம் கி.மு. 6,000 என்பது பல அறிஞர்கள் முடிவு.

சுந்தரர் என்பது திருமூலரின் இயற்பெயர். தென்பாண்டி நாட்டில் தோன்றிய இவர், பொதிகையில் தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த அகத்தியரின் மாணவராகத் தமிழ் அறிவு நூல்களைக் கற்றுக் கொண்டார். பின் அகத்திய முனிவரின் அறிவுரையின்படி கயிலை மலைச் சாரல் சென்று யோக ஞான நூல்களை கற்றுக் கொண்டார். பின் கயிலைக்கேசென்று நந்தியெம்பெருமானின் மாணவர் ஆனார். நந்தியெம்பெருமான் இவருக்கு நாதர் என்ற பட்டம் வழங்க ''சுந்தரநாதர்'' ஆனார். நந்தியெம்பெருமானிடம் சுந்தரர் பயின்ற போது அவரிடம் பயின்ற மற்ற மாணாக்கர்கள் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய எழுவர் ஆவர். திருமூலராகிய சுந்தரரையும், சேர்த்து எண்மர் நந்தியெம்பெருமானிடம் கற்றுத் தேர்ந்தமையைத் திருமந்திரத்தில்

''நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர், சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரமர்
என்றிவர் என்னோடு எண்மரு மாமே'' (129)

என்ற பாடல் தெரிவிக்கின்றது.

சிவபெருமான் தம்முடைய திருமுகங்களிலிருந்து சிவாகமங்களைத் தோற்றுவித்தார். சிவபெருமான் முதலில் தோற்றுவித்த சிவாகமங்கள் காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம் சுப்பிரபேதம், மகுடம் ஆகிய ஒன்பது ஆகமங்கள் ஆகும்.

''தவமாம் பிரமீசர் தம்மிற்றாம் பெற்ற
நவஆகமம் எங்கள் நந்தி பெற்றானே'' (72)

''பெற்ற நல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம், உயர்சிந்தம் வாதுளம்
மற்றவவ் வியாமளம் ஆகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே'' (73)

என வரும் திருமந்திரப் பாடற் பகுதிகளால் ஆகமங்கள் ஒன்பதாவதை அறியலாம். அவ்வொன்பது ஆகமங்களையே நந்தியெம்பெருமான் சுந்தரநாதர் உள்ளிட்ட எண்மர் மாணாக்கர்களுக்கு உபதேசித்துள்ளார்.

நந்தியெம்பெருமானின் மாணவராக ஆகமங்களைப் பயின்று வந்த காலத்தில், சிதம்பரத்தலத்தில் கூத்தபெருமானின் திரு நடனக் கோலம் காண விரும்பிய பதஞ்சலி, வியாக்கிரமர் ஆகியோருடன் சுந்தரநாதரும் சிதம்பரம் வந்து சிவபெருமானைத் தரிசித்துள்ளார்.



திருமூல நாயனார்

## மனமே இதை மறக்காதே!

இந்த உடல் புகையும் சாம்பலுமாகப் போகும். அல்லது மண்ணோடு மண்ணாகப் போகும். அதற்குப் பின் நிலையாக இருப்பது நாம் செய்த செயல்களே. மனமே இதை மறக்காதே.

—உபநிடதம்.

''செப்பும் சிவாகமம் என்னுமப் பேர்பெற்று
அப்படி நல்கும் அருணந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந்தேனே''. (136)

என்ற திருமந்திரப் பாடலால், தில்லையில் நடராஜர் பெருமானைத் தரிசனம் செய்தபின் திருமூலர் மீண்டும் கயிலைக்கே சென்று தவ யோகத்தில் எண்ணற்ற காலம் ஈடுபட்டுள்ளமை விளங்கும்.

பிறகு அவர் தம்முடைய ஆசிரியரான அகத்தியரைக் காண விரும்பி மறுமுறை தமிழகம் வந்த பொழுதே அவருக்குத் 'திருமூலர்' என்ற பெயர் ஏற்படக் காரணமான நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

அகத்தியர் தங்கி வாழ்ந்து வந்த பொதிகை மலையை நோக்கிப் புறப்பட்ட சுந்தரநாதர், வழியில் திருக்கேதாரம், பசுபதி நேபாளம், காசி, ஸ்ரீசைலம் திருக்காளத்தி, திருவாலங்காடு, திருக்கச்சி ஏகம்பம், திருவதிகை, பெரும்பற்றப் புலியூர் முதலான சிவத் தலங்களையும் கண்டு வணங்கி, இறுதியில் திருவாவடுதுறைக்கு வந்து அங்கு எழுந்தருளியுள்ள சிவ பெருமானை வணங்கி வழிபட்டார். அத்தலத்தை விட்டுப் புறப்பட அவருக்கு ஏனோ மனமே வராமல், அவருடைய மனம் திருவாவடுதுறை ஈசன்பால் ஒன்றி நின்றது. தம் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு தென் பொதிகை செல்லலாம் என அவர் திருவாவடுதுறையை விட்டுப் புறப்பட்டு காவிரியின் கரைக்கு வந்தபோது அங்கே ஒருகாட்சியைக் கண்டார்.

திருவாவடுதுறையை ஒட்டி, அதன் தென்புறம்இருக்கும் ஊர் சாத்தனூர். சாத்தனூரில் மூலன் என்ற இடையன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் வழக்கம்போல் பசுக் கூட்டங்களை மேய்க்க வந்தவன், பாம்பு கடித்து மாண்டுபோனான். அவன்பால், அன்பு கொண்ட பசுக்கள், அவனைச் சூழ்ந்து நின்று கண்ணீர் சிந்தி அழுதுகொண்டு இருந்தன. இடையன் உடலைச் சுற்றிச் சுற்றி வந்து அவனை மோந்து, பசுக் கூட்டங்கள் கதறிக் கண்ணீர் விடுவதைக் கண்ட சுந்தரநாதர், அவ்விடையன் மீண்டும் உயிர் பிழைத்தால் அன்றி பசுக்கூட்டத்தின் துயரம் அகலாது என்பதை எண்ணி, தாம் பெற்றிருந்த அட்டமா சித்திகளில் ஒன்றாகிய கூடுவிட்டுக் கூடும் பாயும் சித்தியினால் இடையன் உடலுக்குள் தம்முயிரைக் கொண்டு செலுத்த திருவுள்ளம் பாலித்து அவ்வாறே செய்தருளினார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமான் திருமூல நாயனார் புராணத்தில் இவற்றையெல்லாம் விரிவுபடப் பாடியிருக்கிறார்.

''மற்றவன்தன் உடம்பினையக் கோக்குலங்கள்
வந்தணைந்து
சுற்றிமிகக் கதறுவன சுழல்வன மோப் பனவாக
நற்றவயோ கியர்காணா நம்பரரு ளாலேஆ
உற்றதுயர் இவைநீங்க ஒழிப்பன் என வுணர்
கின்றார்.

(பெரியபுராணம், திருமூலர் 12)

''இவனுயிர்பெற் றாலன்றி யாக்களிடர் நீங்கா'
வென்
றவனுடலிற் றம்முயிரை யடைவிக்க வருள்
புரியுந்
தவமுனிவர் தம்முடலுக் கரண்செய்து
தாமுயன்ற
பவனவழி யவனுடலிற் தம்முயிரைப்
பாய்த்தினார்.''

(பெரியபுராணம்..திருமூலர் 13)

இவ்வாறு மூலன் என்ற இடையன் உடலில் தம்முயிரைச் சுந்தரநாதர் செலுத்தி திருமூலராக ஆவினம் மகிழ உயிர் பெற்றெழுந்தார். ஆவினங்களைத் தொடர்ந்து சென்று, ஆக்கள் தம்தம் இல்லங்களைப் போய் அடையக்கண்டு மகிழ்ந்தார்.

அன்றைய இரவு சாத்தனூர் மடம் ஒன்றில் திருமூலர் தங்க, இடையன் மூலனின் மனைவி, திருமூலரைத்தன் இல்லத்திற்கு வர அழைத்தாள்., திருமூலர் பதிலொன்றும் கூறாமல் தவயோகத்தில் ஈடுபட்டிருக்க இவருக்குப் பித்து பிடித்து விட்டதோ என மயங்கித் தம் ஊராரையும் அழைத்து வந்து, திருமூலர் செய்கையை அவர்களுக்குக் காட்டினாள். சிவ யோகத்தில் ஈடுபட்டு நிற்பவர் சுந்தரநாதர் என்பதைத் தெளியாத அவர்கள், மூலனே இறையருளால் யோகியானான் என்பதாகக் கொண்டு, அவன் இனி இல்லறத்திற்குப் பயன் படமாட்டான் என்பதாக இடையனின் மனைவிக்கு ஆறுதல் கூறி அவளை அழைத்துச் சென்று விட்டனர். இடையனின் உடலுக்குள் இனித்தாம் இருக்க வேண்டா என்று நினைத்து சுந்தரநாதர் மறைவிடத்திற்குச் சென்று தாம் பாதுகாப்பாக வைத்த தம்முடலைத் தேடினார். ஆனால் அங்கே அவருடைய உடல்

இருக்கவில்லை. ''சிவாகமங்களை திருமூலனாய்த் தமிழில் படைக்க வேண்டுமென்விரும்பி சிவபெருமானே தம்முடலை மறைத்தனன்'' என்பதாகச் சுந்தரநாதர் தெளிந்து, அற்றை நாள் முதல் திருமூலர் என்ற திருநாமம்பூண்டவராய் திருவாவடுதுறை சிவபெருமானின் ஆலயத் திற்கே திரும்ப வந்து அரச மரத்தடியில் இருக்கை கொண்டு மூவாயிரம் ஆண்டுக் காலம் சிவயோகத்தில் ஈடுபடுவார் ஆயினார்.

நந்தியெம்பெருமான் தமக்கு அறிவுறுத்திய சிவாகமங்கள் ஒன்பதினை ஒன்பது தந்திரங்களாக வகுத்துக் கொண்டு, ஆண்டொன்றுக்கு ஒரு பாடல் வீதம் 3,000 ஆண்டுகளுக்கு மூவாயிரம் தமிழ் மந்திரங்களைத் திருமந்திரமாகத் திருமூலர் யாத்தருளினார். 3,000 ஆண்டுகள் திருவாவடுதுறையில் யோகத்தில் அமர்ந்து, இவ்வாறு திருமந்திரம் வழங்கிய பின் திருமூலர் மீண்டும் திருக்கயிலையை அடைந்து சிவபெருமானின் திருவடி அடைந்தார் என்பது அவர்தம் வரலாறு.

''ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத்
தோருய்ய
ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை
பான்மைமுறை யோராண்டுக் கொன்றாகப்
பரம்பொருளாம்
ஏனவெயி றணிந்தாரை 'யொன்றவன்தான்'
என வெடுத்து''

''முன்னியவப் பொருண்மாலைத் தமிழ்மூவா
யிரஞ்சாத்தி
மன்னியமூ வாயிரத்தாண் டிப்புவிமேன்
மகிழ்ந்திருந்து
சென்னிமதி பணிந்தார்தம் திருவருளால்
திருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத்
தாளடைந்தார்''

(பெரியபுராணம்: திருமூலர் 26, 27)

என்பர் சேக்கிழார்.

சேக்கிழார் இவ்வாறு பன்னிரண்டாம் நூற்றாண்டில் தாம் பாடிய பெரிய புராணத்தில் திருமூலநாயனார் வரலாற்றை விரிவாகப் பாடியிருக்கிறார். அவருக்கு முன்னமே பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் திருமூலர் வரலாற்றை

'குடிமன்னுசாத்தனூர்க் கோக்குலமேய்ப்போன்
குரம்பை புக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை
முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபுர
விட்டென்னுச்சி
அடிமன்ன வைத்த பிரான் மூல னாநின்ற
வங்கணனே.''

## ஸ்ரீரங்கம் இராஜகோபுரத்திற்குத் தொங்கும்கார்

திருச்சி மலைக்கோட்டையை இரவுநேரத்திலும் பகல்போல் ஆக்க ஐந்தேகால் இலட்சம் ரூபாய் செலவில் இராட்சத மின் விளக்குகள் அமைக்க இருக்கிறோம்.

ஸ்ரீரங்கத்தில் 236 அடி உயரத்தில்இராஜகோபுரம் அமைக்கப்பட்டு இருக்கிறது. அங்கு கீழே இருந்து கோபுர உச்சிக்கு ''லிப்ட்'' வசதி செய்யப் பரிசீலித்து வருகிறோம்.

அதேபோல் மலைக் கோட்டை உச்சியில் இருந்து ஸ்ரீரங்கம் இராஜகோபுரத்திற்கு 6 கோடி ரூபாய் செலவில் தொங்கு கயிறுகார் (கேபிள் கார்) அமைக்கும் திட்டத்தைத் திருச்சி கலெக்டர் விசுவநாதன் கொடுத்து இருக்கிறார்.

இந்தத் திட்டம் சுற்றுலா பயணிகளை வெகுவாகக் கவரும் திட்டம் ஆகும். ஆனால் உடனடியாகச் செய்ய நிதி இல்லை. எனவே இந்தத் திட்டத்தைத் தனியார் யாராவது ஏற்று நிறைவேற்ற முன் வந்தால் அதுபற்றிப் பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

—திருச்சியில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மாண்புமிகு அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் தெரிவித்த தகவல்.

என்று பாடியிருப்பதாலும், நம்பியாண்டார் நம்பிக்கு முன்னமே வாழ்ந்திருந்த சுந்தரர் தம் திருத்தொண்டர் தொகையில் ''நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன்'' எனக் குறிப்பிட்டிருப்பதாலும், அவருக்குமுன் வாழ்ந்திருந்த திருஞானசம்பந்தரே திருவாவடுதுறையின் கண்மறைவாக வைக்கப்பட்டிருந்த திருமூலரின் திருமந்திரத்தைக் கண்டுபிடித்து வெளிப்படுத்தினார் என்று ஒரு வரலாறு கூறப்படுவதாலும் திருமூலர் கி.பி. 7-ம் நூற்றாண்டிற்கு முன் தமிழகத்தில் வாழ்ந்திருந்த தவ ஞானி என்பது தெளிவாக விளங்குகிறது.

திருமூலர் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்திருந்த காலத்தை அறிஞர்கள் வரையறை செய்யும்போது அவர் திருவாவடுதுறையில் சிவயோகத்தில் திளைத்திருந்தது மூவாயிரம் ஆண்டுகள் என்றும் அதற்கு முன் அவர் கயிலையில் நந்தியெம் பெருமானின் மாணாக்கராய் சிவாகமங்களைக் கற்றுத் தியானத்தில் ஆழ்ந்திருந்தது ஒரு மூவாயிரம் ஆண்டுகள் என்றும் ஆக அவர் புவியுலகில் வாழ்ந்திருந்த காலம் ஏறக்குறைய ஆறாயிரம் ஆண்டுகள் என்றும் கி.மு. 6,000-ஆவது ஆண்டு வாக்கில் தோன்றி கி.பி. ஒன்று வரை திருமூலர் வாழ்ந்திருந்தல் வேண்டும் எனவும் வரையறை செய்கின்றனர். இவ்வளவு நீண்ட

## பிரார்த்தனை

படைத்தவரிடத்தில் இருதயத்தைப் பறிகொடுப்பதும், அவருடைய ஆசியைக் கோருவதுமே பிரார்த்தனை.

—மகாத்மா காந்தி.

காலம் வாழ்வது சாத்தியமாகுமா என்று ஐயப்படுவார்க்குத் திருமூலர் தம் திருமந்திரத்திலிருந்தே பல அகச்சான்றுகள் காட்டப்படுகின்றன.

''தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே'' (136)

''இருந்தேனிக் காயத்தில் எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற விடத்தே
இருந்தேன் இமயவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே''(102)

என்பன போன்ற திருமந்திரப் பாடல்களால் அவர் கயிலாயத்தின் கண் நந்திதேவரின் மாணாக்கராய் இருந்த காலத்தும் சுமார் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்பது கூறப்படுகின்றது. திருவாவடுதுறையிலும் அரச மரத்தடியில் சிவயோகத்தில் அவர் 3,000 ஆண்டுகள் வாழ்ந்திருந்தமையை சேக்கிழார் வாக்கினாலும் கண்டோம். இன்னும் திருமூலரே தம் திருமந்திரத்தில்,

''சேர்ந்திருந்தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை,
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்கள் ஓதியே'' (140)

என்பதில் தாம் திருவாவடுதுறை ஆலயத்தின் அரச மரத்தினடியில் தங்கிச் சிவயோகத்தில் திளைத்திருந்தமையைச் செப்புகிறார். சித்தர்கள் எனப்படுவோர் வாசி என்ற மூச்சினை அடக்கி ஆண்டு, யோக சக்தியினால் உடலில் உள்ள மூலாதாரம், கொப்பூழ், இதயம், இரைப்பையின் நடு, கழுத்து, தலைமுடி என்ற ஆறு இடங்களிலும் மனத்தை முறையாக நாட்டிக் குண்டலினியை எழுப்பிப் பலப்பல அனுபவமும் வெற்றியும் கண்டு, எல்லாம்ஆன பரம்பொருளில் நிலைத்து சித்தி பெற்றவரே ஆவர். அத்தகைய சித்தராகிய திருமூலர் மரணத்தை வென்று வாழும் வழிமுறைகளையும் திருமந்திரத்தில் செப்பியுள்ளார். ஒரு நாளில் சாதாரணமாக 21600 மூச்சுகள் விடப்படுகின்றன. பிராணாயாமம், சிவயோகம்முதலான சாதனைகளால் சித்தர்கள் மூச்சினை அடக்கி ஆயுளைப் பெருக்குவர்.

''காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்கும் குறியது வாமே'' (602)

''நாட்ட மிரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமு மில்லை மனைக்கும் அழிவில்லை''
(584)

''வளியினை வாங்கி வயிற்றி லடக்கில்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே'' (551)

''ஈராறு கால்கொண்டு எழுந்த புரவியைப்
பேராமற் கட்டிப் பெரிதுணர வல்லிரேல்
நீரா யிரமும் நிலமா யிரத் தாண்டும்
பேராது காயம்பிரான்நந்தி ஆணையே'' (702)

போன்ற பல கருத்துக்களால் திருமூலர் இப்புவியில் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்திருந்த சித்தர் ஆவது தெளிவாகும்.

திருமூலரின் திருமந்திரத்தில் சித்த மருத்துவம் சம்பந்தமான கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

''உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினில் உத்தமன் கோயில்கொண்
டானென்
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே''
(704)

''உடம்பார் அழியில் உயிரால் அழிவர்
திடம்பட மெய்ஞ் ஞானம் சேரவும்மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த் தேனே''
(705)

ஆகிய பாடல்களால் உடலை ஓம்புவதன் அவசியத்தைத் திருமூலர் எடுத்துக் காட்டிப் பல்வேறு பாடல்களில் உடலை ஓம்ப வேண்டிய வழிமுறைகளையும் தெரிவித்திருக்கின்றார். இரண்டாம் தந்திரத்தில் கருவுற்பத்தி என்ற அதிகாரத்தில் வரும் பாடல்கள் குழந்தையின் தோற்றம் பற்றி விரிவாகக் கூறும் பகுதியாகும். மூன்றாம் தந்திரம் முழுவதும் அட்டாங்க யோகத்தினை விரிவாக விளக்குகின்றன. அதில் வரும் 'காயசித்தி உபாயம்' 'ஆயுள் பரிச்சை' 'அமுரிதாரணை'' ஆகிய அதிகாரங்கள் நீண்ட காலம் வாழ்வதற்கான வழிமுறைகளை விவரிக்கின்றன.

''தெளிதரும் இந்தச் சிவநீர் பருகில்
ஒளிதரு மோராண்டில் ஊன மொன்றில்லை
வளியுறும் எட்டின் மனமும் ஒடுங்கும்
களிதரும் காயங் கனகம தாமே'' (826)

''நூறு மிளகு நுகருஞ் சிவத்திநீர்
மாறும் இதற்கு மருந்தில்லை மாந்தர்கள்
தேறில் இதனைத் தெளியுச்சி கட்டிடின்
மாறும் இதற்கு மறுமயி ராமே'' (827)

ஓடும் பல நதிகள் கடலில் சேர்ந்து தம் வேற்றுமைகள் நீங்கி, கங்கை , சிந்து, காவேரி, யமுனை என்ற பெயர்களும் வேற்றுமைகளும் நீங்கி ஒன்றாகி விடுவது போல், ஞானிகள் வெவ்வேறு பெயரும் உருவமும் கொண்ட பொருள்களின் ஒருமையைக் கண்டு வேற்றுமை உணர்ச்சியை அகற்றி விடுபட்டு, ஒளிரும் பரம் பொருளை அடைவார்கள்.

—உபநிடதம்

''அளக நன்னுதல் ஆயோர் அதிசயங்
களவு காயம் கலந்த இந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகும் மேனி இருளும் கபாலமே'' (829)

போன்ற பாடல்களில் வரும் மருத்துவக் கருத்துக்கள் ஆய்ந்து பயன்கொள்ளத்தக்கன வாகும். ஏழாம் தந்திரத்தில் வரும் போசன விதி, விந்துற்பனம், விந்துசயம் ஆகிய அதிகாரங்களும் மருத்துவக் குறிப்புகள் கொண்டு விளங்குவனவே.

இவ்வாறு சித்தராகவும், சித்த மருத்துவராகவும், சிவயோகியாகவும் திகழ்ந்த திருமூலர், புவியில் சுமார் 6,000 ஆண்டுகள் வாழ்ந்திருந்து, தம் அரிய கருத்துக்களைத் திருமந்திரமாக வழங்கி இறைவனடி அடைந்துள்ளார். திருமந்திரத்தைக் கற்றவர் எல்லா நலங்களும் பெறுவர் என்பதைத் திருமூலர் தாமே தம் நூலில்

''மூலன்உரை செய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவியை நண்ணுவார் அன்றே'
(சிறப்புப் பாயிரம்)

என்று கூறியிருப்பதால் அறியலாம்.

திருமூலர் செய்த ''மூவாயிரந் தமிழ்'' என்ற நூலே, மந்திரம்போல் மக்களுக்குப் பயன்படும் தன்மையை நோக்கித் ''திருமந்திரம்'' என்று வழங்கப்படுகிறது. மூவாயிரம் தமிழோடு ''முந்நூறு மந்திரம்'' ''முப்பதுபதேசம் ஆகிய இரு நூல்களும் கூட திருமூலர் செய்தனவாக அறியப்படுகின்றன.

''மூலன் உரைசெய்த மூவாயிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முன்னூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்
மூலன் உரைசெய்த மூன்று மொன்றாமே'
(சிறப்புப் பாயிரம்)

என்பதைக் கொண்டு, மூன்று நூல்களைத் திருமூலர் அருளியதாகக் கூறுவர், இப்பொழுது பதிப்பிக்கப் பெற்றுள்ள திருமந்திரம் நூலிலேயே இம் மூன்று நூல்களும் வேறுவேறு எனப் பிரித்தறிய முடியாதபடி விரவியிருக்கின்றன என்பது அறிஞர் தம் கருத்து. அவர்கள் தம் கருத்திற்கேற்ப திருமந்திரப் பதிப்புகளில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்கள்(3047) உள்ளன. சில பதிப்புகளில் கூடுதலாகவும் உள்ளன.

இவ்வாறான தம் திருமந்திரங்களைத் திருமூலர் தம்முடைய மாணாக்கர்கள் எழுவருக்கு உபதேசித்தருளியுள்ளார். சோமன், பிரமன், உருத்தரன், இந்திரன், மாலாங்கன், கந்துருக்காலாங்கி கஞ்சமாலையன் ஆகிய எழுவரே திருமூலரின் மாணாக்கர் ஆவர்.

''மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்'' (133)

என்பது கொண்டும், திருமந்திர நூலில் அவர் தம் பெயர்களை விளித்துத் திருமூலர் உபதேசித்திருப்பது கொண்டும் இதனைத் தெளியலாம். திருமூலர்தம் மாணாக்கர்களில் ஒருவரான கஞ்சமலைச் சித்தர் அமைத்த மடம் இன்றும் சேலம் மாவட்டத்தில் ''சித்தர் கோயில்'' எனப் பிரசித்திப் பெற்று விளங்குவது குறிப்பிடத் தக்கது.

''திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் அருமந்த
புத்திக்கு ளேநினைந்து போற்றுமடி
யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்''

என ஞானி ஒருவர், திருமந்திரத்தின் சிறப்பினைப் பாராட்டிப் பாடியிருக்கிறார். நாமும் திருமந்திரத்தை நாளும் ஓதித் திருமூலரைப் போற்றிச் சிவகதி பெறுவோமாக.

— — — —

# கரையேற விட்ட நகரில் அப்பர் கரையேறிய வரலாற்றுப் பெருவிழா

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சைவநெறி தழைத்தோங்கத் தமிழகத்தில் தோன்றிய தவமுனிவரே திருநாவுக்கரசர் ஆவார். பரம்பரைப் பரம்பரையாக சைவத்தில் ஊறிய குடும்பத்தில் பிறந்திருந்தும், விதிவயத்தால் சமண சமயத்தைச் சார்ந்து ஒழுகினார். இவர்தம் தமக்கையார் திலகவதி அம்மையார் திருவதிகை கெடிலவீரட்டானத்திறைவரை நாளும் வேண்டி, வரம் கோரியதற்கிணங்க இறைவரால் சூலைநோய் கொடுக்கப் பெற்று, மீண்டும் சைவ சமயமே சார்ந்து தம் நோய் நீங்கும் பேறு பெற்றார்.

தம் இயல் சமயமாகிய சைவ சமயத்தைச் சார்ந்த திருநாவுக்கரசருக்குச் சமணர்களும், சமணர்களின் தூண்டுதலால் காஞ்சியை தலைநகராகக் கொண்டு ஆண்ட மகேந்திரவர்மப் பல்லவனும் இழைத்த இன்னல்கள் மிகப் பலவாகும். திருநாவுக்கரசரைக் கொல்லுதல் வேண்டி நீற்றறையில் இட்டனர். ''மாசில் வீணையும்' எனத் தொடங்கும் திருப்பதிகம் அப்பர் பாடவும், ஈசனருளால் நீற்றறை குளிர்ப் பொய்கையாய் மாறி திருநாவுக்கரசரை உய்ய வைத்தது.


திருநாவுக்கரசரை மீளவும் சமணர்கள் கொல்ல முயன்று, நஞ்சூட்டிய உணவை உண்பித்தனர். நஞ்சுண்ட கண்டரின் அருளால், நஞ்சிட்ட உணவும் நாவுக்கரசருக்குத் தீங்கேதும் சூழவில்லை. மீளவும் திருநாவுக்கரசரைக் கொல்லக் கொலைக் களிற்றினைச் சமணர்கள் ஏவினர். ''சுண்ண வெண் சந்தனச் சாந்தும்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிய திருநாவுக்கரசர் ''அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதுமில்லை' எனக் கூற, ஏவப்பட்ட கொலைக்களிறு தன்னை செலுத்திய பாகரையும் சமணரையுமே கொன்றது.

திருநாவுக்கரசரைக் கொல்ல முயன்ற முயற்சிகள் பலவும் இவ்வாறு பயனற்றுப் போக, முயற்சியைக் கைவிடாத சமணர்கள் திருநாவுக்கரசரைக் கல்லுடன் சேர்த்துக் கட்டிக் கடலினுள் போட்டனர். அப்பொழுது திருநாவுக்கரசர் நமச்சிவாயப் பதிகம் பாடினார்.

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே''

என்பது முதலாகப் பத்துப்பாடல்களைப் பாட, திருநாவுக்கரசரைக் கட்டிய கல்லே தெப்பம் ஆக, திருநாவுக்கரசர் கடலில் மிதந்து கரையேறினார். அவர் கரையேறிய இடம் கடலூரில் இன்றைக்கும் ''கரையேறவிட்ட நகர்'' என்று வழங்கி வருகிறது.

26-4-86 சனிக்கிழமையன்று கரையேறவிட்ட நகரில், அப்பரின் விழா சிறப்புற கொண்டாடப் பட்டது. இவ்விழாவிற்குத் ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு டாக்டர் த. அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையேற்று, ''திருநாவுக்கரசரின் திருத்தொண்டு' பற்றிச் சிறப்புரையாற்றினார்கள். புதுக்கோட்டை திலகவதியார் ஆதீனகர்த்தர் தவத்திரு சாயிமாதா சிவபிருந்தா தேவி அவர்கள் ''திலகவதியாரும் திருநாவுக்கரசரும்'' என்ற பொருள்குறித்துச் சிறப்புரை யாற்றினார்கள்.



**அப்பர் கல்லைத் தெப்பமாகக் கொண்டு மிதக்கும் காட்சி**

ஆலய நிர்வாக அதிகாரி திரு எஸ். முனிசாமி அவர்கள், அப்பர் கரையேறிய இடத்தில் அப்பருக்கு மணிமண்டபம் அமைக்க தமிழக அரசு 2 ஏக்கரா நிலம் வழங்கியிருப்பதையும், விரைவில் மணிமண்டபம் அமைக்கும் பணி, மக்கள் ஆதரவுடன் தொடங்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்பதையும், நிதிஉதவி செய்ய விழைவோர், நிர்வாக அதிகாரி, அருள்மிகு பாடலேசுவரர் தேவஸ்தானம் திருப்பாதிரிப் புலியூர் என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதையும் தெரிவித்தார்கள்.

—'நிறைமதி'

# அம்மன்குடி ஸ்ரீ துர்கை

கே. வி. கிருஷ்ணமூர்த்தி
காமாட்சிபுரம்–609809

கும்பகோணத்திற்கு கிழக்கே திருநாகேஸ்வரத்திற்கு அருகில் உள்ள அம்மன்குடி தேவி தபோவனம் என்கிற ஸ்தலம் மூர்த்தி, தீர்த்தம் இவைகளால் பிரசித்தி பெற்றது. இங்கு சிவ பெருமான் பார்வதி தேவியோடு எழுந்தருளி யிருக்கிறார்.

இங்கு கிழக்கு முகமாக தனி ஆலயத்தில் அஷ்டபுஜ துர்கா பரமேஸ்வரி எழுந்தருளியிருப்பது இந்த ஸ்தலத்தின் சிறப்பு.

ஸ்தல விருட்சம்: வில்வம்
தீர்த்தம்: பாபவிமோசன தீர்த்தம்



அஷ்டபுஜ துர்கா பரமேஸ்வரி

ஆலயத்திற்குள் நுழைந்ததும் முதலில் தரிசிப்பது தபஸ் விக்னஹர விநாயகரை. இந்த விநாயகர் மகிஷாசுரவதத்திற்கு பிறகு ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி 12 வருடம் தபம் இயற்றும் போது விக்னம் வராமல் இருப்பதற்காக ஸ்தாபிக்கப் பட்டவர். தபஸின் சின்னமாக இடது பாகத்தில் பிரும்ம தண்டம், அக்ஷமாலை இவைகளுடன் கம்பீரமாக காட்சி அளிக்கிறார்.

அடுத்த சந்நிதி சோமஸ்கந்த மூர்த்தம் இருக்க வேண்டிய இடத்தில் தனி கருவறையில் அஷ்டபுஜ துர்காபரமேஸ்வரி நான்கரை சாண் உயரத்தில் சாலிகிராமம் என்று சொல்லக்கூடிய ஒரு வித சிலா ரூபத்தில் காட்சி கொடுக்கிறார்.

**தீர்த்த விசேஷம் :**

மகிஷாசுரனின் கொடுமை தாளாமல் தேவர்கள், மும்மூர்த்திகளுடன் துர்கா புரியில் தேவியை சரணமடைந்தார்கள். ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி, ''என்னிடம் பிரார்த்தித்த மாத்திரத்திலேயே மகிஷாசுரன் வதம் செய்யப்பட்டான் என்ற எண்ணத்துடன் அவரவர்கள் அவரவர்கள் இடத்தைச் சென்று அடையுங்கள் என்று அனுகிரகித்தாள்.

ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி தன்னிடம் உள்ள அஷெளனி சைன்யங்களுடன் மகிஷாசூரனின் வதத்திற்காக புறப்பட்ட பொழுது நவகிரகங்களும் பின் தொடர்ந்தன. அதனால் இவ்வாலயத்தில் நவகிரகங்களும் ஸ்ரீ துர்காபரமேஸ்வரி சன்னதியில் அந்தர்கதம் என்பதால் நவகிரகங்கள் தனியாக இல்லை.

**தீர்த்த மகிமை:**

ஸ்ரீ துர்கா பரமேஸ்வரி சிவபக்தனான மகிஷாசுரனைக், கன்னிகாரூபத்தில் அவன் சிம்மாசனத்தில் கொலு வீற்றிருக்கும் தருணத்தில் துவந்த யுத்தமாக அவன் இரண்டு கொம்பு

களையும் இழுத்துப் பூமியில் தள்ளிவிட்டு தனது இடது காலை அவன் மேல் வைத்த மாத்திரத்தில் மகிஷ முகம் அசுர முகமாக மாறியது. அப்போது தேவியானவள் தன்னுடைய அபய ஹஸ்தத்தை மகிஷாசூரனின் கிரீடத்தில் வைத்து சூலாயுதத்தை அவனுடைய சரீரத்தில் பாய்ச்சிய திருக்கோலம் அனுகிரகமா, நிக்கிரகமா என்கிற கண்கொள்ளாக் காட்சி.

சூலாயுதம் மகிஷனுடைய சரீரத்தில்பட்ட மாத்திரத்தில் துர் நீரானது ஸ்ரீதுர்காதேவியின் மேல் பட்டு எரிச்சலையும் அரிப்பையும் உண்டு பண்ணியது.

உடனே தேவியானவள் மகிஷனின் வதத்திற்குப்பிறகு சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் சிரமத்தை எப்படி போக்கிக் கொள்வது என்று ஈஸ்வரனைக் குறித்து ஸ்துதி செய்யுங்கால் ஈஸ்வரன் அசரீரியாக 'காசியிலிருந்து சேது முதலானஎல்லா தீர்த்தங்களிலும் தீர்த்தாடனம் செய்துவரவும்' என்று சொன்னதின் பேரில் சகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தபிறகு அம்மன் குடியில் உள்ள பாபவிமோசன தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவுடன் சூலாயுதத்தில் ஏற்பட்ட ரத்த கறையும் ,சரீரத்தில் ஏற்பட்ட உபாதையும் நீங்கப் பெற்றதால் இந்த இடமே தவம் இயற்ற தகுந்த இடம் என்று நிர்ணயம் செய்து கொண்டு 12 வருடம் தவம் இயற்றுங்கால் பரமேஸ்வரன் பிரத்யட்சமாகி ''உன்னுடைய தவத்தை மெச்சினேன். மகிஷாசூரனை வதம் செய்ததால் ஏற்பட்ட சிவாபராதமும் பிருமஹத்தியாகிய தோஷங்களும் என்னால் சங்கல்பிக்கப்பட்ட பாபவிமோசன தீர்த்தத்தில் ஸ்நானம் செய்ததால் போய் விட்டன. அதே போல் இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து உன்னை ஆராதனை செய்பவர்களுக்குச் சகல தோஷங்களையும் போக்கி அனுகிரகம் செய்து கொண்டு இருப்பாயாக'' என்று திருவாய் மொழிந்தருளினார்.

ஆகையால் இந்த பாபவிமோசன தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஸ்ரீதுர்கா பரமேஸ்வரியை தரிசனம் செய்பவர்கள் சகல தோஷங்களும் நிவர்த்தி ஆகி சகல விதமான சருமவியாதிகளிலிருந்தும் நிவர்த்தி பெறுகிறார்கள் என்பது கண் கூடு.

கடும் கோடையிலும் இந்த குளத்து நீர் வற்றுவதில்லை. இந்த விவரங்கள் பிரசித்தி பெற்ற தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் வட மொழியில் உள்ள ஓலைச்சுவடியில் எழுத பெற்ற பிரும்ம கைவர்த்த புராணத்திலுள்ள ''துர்காபுரிமகாத்மியம்'' என்ற ஓலைச் சுவடியிலும்உள்ளது.

திருப்பணி:

இப்புராதன ஆலயத்தின் திருப்பணியை ஸ்ரீகாஞ்சி மாமுனிவர் அவர்கள் அனுகிரகத்துடன், தவத்திரு திருப்பனந்தாள் காசிவாசி முத்துகுமாரசுவாமிகள் அவர்களை போஷகராகக் கொண்ட திருப்பணிக்குழு நடத்தி முடித்துள்ளது.

30.4.86 புதன் கிழமை உத்திராட நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை மணி 7க்கு மேல் 7-30க்குள் ரிஷப இலக்கினத்தில் மகா கும்பாபிஷேகமும் இனிது நடைபெற்று இருக்கிறது.

## அருகதை உள்ளவர் யார்?



சுயநலமின்மையே உண்மையான சமயப் பற்றுக்குச் சான்று. ஒருவன் எவ்வளவுக்குத் தன்னலமின்றிப் பிறர்க்கென வாழ்கின்றானோ, அந்த அளவுக்கு அவன் ஆன்மீக ஞானம் பெற்றுச் சிவபெருமான் அருகே இருக்கக் கடவன். அவன்தான் படித்தவனாயினும் பாமரனாயினும் அறிந்தோ அறியாமலோ மற்ற எவரைக் காட்டிலும் சிவபெருமான் பக்கத்தில் இருக்க அருகதை உள்ளவன் ஆகிறான். அப்படியின்றி ஒருவன் சுயநலம் மிக்கவனாயிருப்பின், அவன் எல்லாக் கோயிலுக்கும் சென்று சேத்ராடனம் செய்திருப்பினும், சிறுத்தை யுடல் போலத் தன்னுடம்பு எல்லாம் நீறுபூசித் திலகம் தீட்டித் திரியினும், அவன் சிவபெருமானை விட்டு வெகுதூரம் விலகியுள்ளவனேயாகிறான்.

—சுவாமி விவேகானந்தர்.

# திருக்கழுக்குன்றம்


வித்துவான் பூசை ஆ. நமச்சிவாயம்

## தலம்

நீராரும் கடலுடுத்த நிலவுலகில், திருமிக்க தென்றமிழ் நாட்டின்கண் திகழ் தொண்டை நன்னாடு. இந்நாடு சான்றோருடைத்து என ஆன்றோர் பலராலும் புகழப் பெற்றது. இத் தொண்டை நாட்டில் ஆன்மாக்களுக்கு அருள் சுரக்கும் சிவபரம் பொருள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவ தலங்கள் பன்னூற்றுக் கணக்காய் உள்ளன. அவற்றுள் சிவாநுபூதிச் செல்வர்களாகிய திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நால்வர்களாலும் பாடல் பெற்ற தலங்கள், முப்பத்திரண்டாகும். அத் தலங்களுள் திருக்கழுக்குன்றம் சைவசமய பரமாசிரியர்கள் நால்வர்களாலும் பாடல் பெற்ற திருத்தலமாகும்.

## அமைந்துள்ள இடம்

இத்தலம் செங்கற்பட்டு புகை வண்டி நிலையத்திற்கு கிழக்கே ஒன்பது கல் தொலைவில் உள்ளது. நான்கு வேதங்களும் இங்கு மலை வடிவு கொள்ள அதன் உச்சியில் சிவபெருமான் எழுந்தருளியிருப்பதனால் வேதகிரியென்றும் வேதாசலம் என்றும் வழங்குகின்றது.



அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயம்

## வேறு பெயர்களும் பெயர்க் காரணங்களும்

உலகிற்குத் துன்பம் விளைவித்த அரக்கர்களையெல்லாம் கொன்ற கோடி உருத்திரர்கள் அப்பாவம் நீங்குவதற்காக இங்கு வந்து பூசித்துப் பாவத்தைப் போக்கிக் கொண்டார்களாகையால் உருத்திர கோடி என்றும், திருநந்தி தேவர் தவம் செய்து பேறு பெற்றதால் நந்திபுரி என்றும், இந்திரன் இத்தலத்தில் சிவ

பெருமானைப் பூசித்துத் தனது பாவத்தைப் போக்கிக் கொண்டனன் ஆகையால் இந்திரபுரி என்றும், பிருகு முனிவருடைய மனைவியைக் கொன்ற பாவமும், அம்முனிவர் இட்ட சாப மும் நீங்கத் திருமால் இங்கு பூசித்தாராகை யால் நாராயணபுரி என்றும், தனக்கு வந்த துன்பங்கள் யாவையும் போக்கிக் கொள்ள பிர மன் பூசித்துப் பேறு பெற்றதால் பிரமபுரி என் றும், சூரியன் பூசித்துப் பேறு பெற்றதால் தின கரபுரி என்றும், பாணினி முனிவரால் செய்யப் பட்ட வியாகர்ண நூலைக் கேட்டும் தெளிவு பெறாமல் சில முனிவர்கள் இத்தலத்திற்கு வந்து தெளிவு பெற்றார்கள் ஆகையால் முனி கணபுரி என்றும் இத்தலத்திற்கு பல பெயர்கள் உண்டு. இன்னும் தருமகோடி, தென்கயிலை, சுதலிவனம், சிவபுரம் எனவும் பலப்பல பெயர் களையும் பெற்றுள்ளது இத்தலம்.

**மலை**

இத்தலத்தின் மத்தியில் அமைந்துள்ள வேதமலை சுமார் முந்நூற்று நாற்பது அடி உயரமுள்ளது. இம்மலையின் பரப்பு 264 ஏக் கர். மலைவலம் பாதை இரண்டேகால் மைல் நீளமுடையது. இம்மலையுச்சியில் வேதகிரீசப் பெருமான் கண்கண்ட தெய்வமாய்க் கணக்கற்ற ஆன்ம கோடிகளுக்குக் கருணை புரிந்து உடற் பிணி யயும் உயிர்ப் பிணியையும் போக்கிக் பவரோக வைத்தியராக விளங்குகின்றார்.

இம்மலையில் தெய்வத் தன்மை பொருந் திய கழுகு வடிவங் கொண்ட முனிவர் இருவர் நாடோறும் வந்து வழிபடுகின்றனர். ஆதலால் கழுகாசலம் என்றும் பட்சி தீர்த்தம் என்றும் வழங்கப்பெறுகின்றது. தினமும் காலை 11 மணிக்கு அத்தெய்வக் கழுகுகள் தவறாது மலை உச்சியில் வந்து தேசிகரால் கொடுக்கப் படும் அமுதினை அருந்திச் செல்வதை அனை வரும் கண்டு பரவசமடைகின்றனர்.

வேதகிரீசப் பெருமான் எழுந்தருளியுள்ள சுற்றுச் சுவரில் நந்திகேஸ்வரர், சோமாஸ்கந்தர் தட்சிணாமூர்த்தி முதலிய மூர்த்திகள் எழுந் தருளியுள்ளதைக் காணலாம். இம் மலையில் பலப்பல மூலிகைகள் இருப்பதாலும், சஞ்சீவிக் காற்று வீசுவதாலும் நோய் நீக்கம் பெற்றும் பயித்தியம் முதலியவற்றிலிருந்து விடுதலைய டைந்தும் சிறப்புறுகின்றனர். தீராத நோய் களிலிருந்தும் தீர்வு பெறுகின்றனர். நினைத்த எண்ணம் நிறைவேறப் பெறுகின்றனர். மகப் பேறு, செல்வப்பேறு முதலிய எல்லாப் பேறு களையும் பெற்று வாழ்கின்றனர். இவை புனைந்துரையல்ல; உண்மையென்பதை அனை வரும் உணர்வர்.

மலை மேல் எழுந்தருளியிருக்கும் பெரு மான் கற்பகம் போல ஆன்மாக்கள் வேண்டிய யதை வேண்டியவாறு அருள் புரிகின்றார். ஆகையால் ''கழுக்குன்றத்து அமர்ந்தான் தன் னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே'' என்று திருநாவுக்கரசு சுவாமிகள் திரு வாய் மலர்ந்தருளியுள்ளார். சிவபெருமான் காதலோடு எந்நாளும் வீற்றிருக்கும் தலம் இத் திருத்தலமாகும் என்பதைத் திருஞானசம்பந்த சுவாமிகள் தாம் அருளிய தேவாரத் திருப்பதி கத்தில் ஒவ்வொரு பாட்டிலும் ''பெருமான் காதல் செய் கோயில் கழுக்குன்றே'' என்று அருளியுள்ளார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், ''பாவவினை கள் நீங்கச் சென்று கழுக்குன்றத்தைத் தொழு மின்;

இரங்கிச் சென்று தொழுமின்
நித்தலும் நீள நின்று தொழுமின்
வெளிறு (அறியாமை) தீரத் தொழுமின்
பு லகள் தீரத் தொழுமின்
பிழைகள் தீரத் தொழுமின்,

என்றெல்லாம் பலமுறை இத்தலத்திற் சென்று தொழுக என்று கட்டளையிடுகின்றார்.

மாணிக்கவாசக சுவாமிகள் ''நான் கலங் கினேன்; கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே'' என்றும்.,

''கணக்கில்லாத திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றில்''

''கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து காட்டினாய் கழுக்குன்றில்''

''காணொணாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றில்''

''அடியார் முனே வந்து காட்டினாய் கழுக் குன்றில்''

என்றெல்லாம் இறைவனது திருவருட் பெருக்கை விளங்கும்படி அருளியுள்ளார்.

''பாவகாரியர் எய்தொணாக் கழுகு சூழ் பறம்பும்'' என்று சிவஞான முனிவரும் சிறப் பாகக் கூறியுள்ளார்.

**தாழக் கோயில்**

திருமலையடிவாரத்தில் ஒரு பெரிய கோயில் உள்ளது. இது பக்தவத்சலர் கோயில் என்ற பெயருடையது. சடையவர்மன் சுந்தரபாண்டி யன் தன் ஆட்சி 9ஆம் ஆண்டில் (கி.பி.1260) இக் கோயிலின் பணிக்காக நிலம் வழங்கிய செய்தி இக் கோயிலில் உள்ள கல்வெட்டொன் றால் புலனாகிறது.

இவ்வாலயத்தில் ஸ்ரீ பக்தவத்சலேசர் அரு வுருவத் திருமேனியாகிய சிவலிங்க வடிவில் எழுந்தருளி அன்பர்கட்கு அருள் சுரந்து வரு வதை அனைவரும் அறிவர். ஸ்ரீவீரபத்திரக் கடவுள் வெளி மண்டபத்தில் மிக்க கம்பீரமாக அருட்காட்சி வழங்கி வருகின்றார்.

இத்தல விநாயகர் வண்டுவனப் பிள்ளை யார் எனப்படுவார். இப்பெருமான் பக்தவத் சலர் ஆலய வெளிப் பிரகாரத்தில் தென் மேற்கு மூலையில் எழுந்தருளி அடியவர்களுடைய இடர் கெடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்.

அதற்கடுத்து ஆறுமுகமும் பன்னிரு கைகளுமு டைய முருகப் பெருமான்ஆலயம் விளங்கு வதைக் காணலாம்.

வடமேற்குத் திசையில் இறைவனருள் சக்தியாய், எல்லாவுலகினையும் ஈன்ற தாயாய், ஆன்மகோடிகட்கு அருள் சுரக்கும் அன்னையாய், மூவுலக நாயகியாயுள்ள திரிபுரசுந்தரியம்பாள் திருக்கோலக் காட்சியை நாடோறும் வணங்கி, வாழ்த்தி, மனத்தில் நினைத்தவர்க்கு அத்தேவி அருள் சுரந்தருளும் நிலையை அறியாதார் யார்?.

**உருத்திர கோடி ஆலயம்**

இத்தலத்தின் தென் கிழக்குத் திசையில் உருத்திரகோடி என்ற ஓராலயம்ஒளிர்கின்றது. அவர்களை உருத்திரர்கள் அழித்தார்கள். கொல்லப்பட்ட அரக்கர்கள் தீயவர்களாயினும் அருந்தவம் செய்தவர்கள். ஆதலால் அவர்களைக் கொன்ற செயல் பாவச் செயலாகும். ''எந்த உயிரைக் கொன்றாலும் பாவம் வந்து சூழும். அப்படியிருக்க, தவமியற்றிப் பலம் பெற்ற அரக்கர்களைக் கொன்ற பாவம் நம்மை விடாது; என் செய்வோம்'' என்றெண்ணிய உருத்திரர்கள் அஞ்சினபோது அவர்களை இறைவன் நோக்கி, 'நீங்கள் பிறருக்கு உதவி செய்ததினால் வந்த இந்தப் பாவம் தொலைய வேதகிரித்தலத்தையடைந்து எம்மை வழிபடுங்கள்'' என்று அருள அவ்வாறே கோடி உருத்திரர்கள் மிக்க மகிழ்ச்சியோடு திருக்கழுக்குன்றத்தை நாடி வந்தனர். வந்தபோது வேதகிரியே சிவலிங்கமென அவர்கட்குத் தோன்றியது. அன்புடன் மயிர்க் கூச்செறிய ஆனந்தக்



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி ஆலயத்திற்கு டெல்லி உச்ச நீதிமன்ற நீதிபதி மேன்மைமிகு எஸ். நடராஜன் அவர்கள் தம் துணைவியாருடன் வருகை புரிந்தார்கள். ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி ஐ.ஏ.எஸ். உடன் உள்ளார்.

இது மிகப் பழமையான தலம். சிவபிரான் தனது திருமேனியினின்றும் கோடி உருத்திரர்களைத் தோற்றுவித்தார். அவர்கள் நாற் புயங்களும் காளகண்டமுமுடையவர்கள். எலும்பு மாலை, புலித்தோலாடை அணிந்தவர்கள். முத்தலைச் சூலம் முதலிய ஆயுதங்களை ஏந்தியுள்ள இவர்களைச் சிவபெருமான் பார்த்து ''நீவிர் முனிவர் தேவர் முதலியவர்க்கு இடையூறு செய்யும் அரக்கர்களை அழித்து அவர்களால் உண்டாகும் துன்பங்களைப் போக்கி இன்பம் உண்டாக்குங்கள்'' என்று கட்டளையிட்டருளினார். பின்னர் மிகப் பயங்கரமான ஆயுதங்களை யேந்திய தீய அரக்கர்கள் கருங்கடல் பொங்கி வந்தாற்போல வந்தபோது, கண்ணீர் சொரிய தோத்திரஞ் செய்து இறைவனை விழுந்து பணிந்தார்கள். பணிந்த உருத்திரர்கள் கோடியர்க்கும் தனித்தனியாக சிவலிங்கக் காட்சியை காட்டியருளினார். ஒவ்வொருவரும் லிங்க பூசையை இயற்றினார்கள். அவர்கள் பூசை புரிந்த தலமே உருத்திர கோடித் தலம் என்று இன்றும் வழங்குகின்றது. இத்தலத்தை நினைத்தாலும் இத்தலப் பெயரை வாயினாற் சொன்னாலும் தீமை விலகி நன்மை வரும்.

இந்த உருத்திர கோடித்தலத்தில் இறைவன் அபிராமி அம்மையுடன் அடியவர்கட்கு அருள் சுரக்கிறார்.

அன்று ருத்திரகோடியுர் அருச்சித்ததானம்
என்று செப்பினும் எவ்வினைக் கேனுமங்
குறினும்
நின்றி றப்பினும் பிறப்பினும் நினைப்பினு
மொருநாள்
சென்றி ருப்பினும் சிவபுரத் தடைவது
திண்ணம்.

—திருக்கழுக்குன்றத்தல புராண வரலாறு

**தீர்த்தங்கள்**

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கு
வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும்
பராபரமே

—தாயுமானார் சுவாமிகள்

''சென்றாடும் தீர்த்தங்கள் ஆனான் கண்
டாய்''

—அப்பர்.

கடவுள் மூர்த்தியாகவும் தலமாகவும் தீர்த்தமாகவும் இருந்து ஆன்ம கோடிகளுக்குத் திருவருள் புரிகின்றார் என்பது ஆன்றோர் முடிவு. அவ்வகையில் திருக்கழுக்குன்றமாகிய இத்தலத்திலும் ஆண்டவன் அருள் வடிவமாக விளங்குகின்ற பல தீர்த்தங்கள் உள்ளன. அவை வருமாறு:

சங்கதீர்த்தம், :—இத்தீர்த்தம் மிகச் சிறந்ததாகும். இறைவன் சந்நிதியில் கிழக்கே யுள்ளது. பன்னிரண்டாண்டிற்கொருமுறைஇத் தீர்த்தத்தில் சங்கு பிறக்கின்றது. (அண்மையில் சென்ற திங்களில் இத்திருத்தலத்தில் சங்கு தோன்றிய மகிமையை மக்கள் கண்டு மகிழ்ந்தது குறிப்பிடத்தக்கது). நோயுற்றவர்கள் நியமமாக அன்புடன் நாடோறும் மூழ்கி வேதகிரியை வலம் வருவார்களானால் பெருநோய் முதலிய நோய்களும், பித்துமுதலிய கோளாறுகளும் நீங்கி நல்லுடலும் நன்மனமும் இம்மை மறுமைப்பயனையும் பெறுவர். பன்னிரண்டாண்டிற்கு ஒரு முறை குருகன்னியா ராசியில் பிரவேசிக்கும் புனித நாளில் ஸ்ரீவேதகிரீசப் பெருமான் அம்மையப்பராய் எழுந்தருளி சங்கதீர்த்தத்தில் தீர்த்தங் கொடுக்குங் காட்சி கண்கொளாக் காட்சியாகும்; புனிதக் காட்சியாகும்.

தாழக்கோயிலுக்குள் ஈசான திசையில் அமைந்துள்ளது நந்திதீர்த்தம். மலைவளம் வரும் வழியில் வடகோடியில் கோடி தீர்த்தமும், நகருக்குக் கிழக்குத் திசையில் இந்திர தீர்த்தமும், தெற்கில் உருத்திர தீர்த்தமும்,

## இந்துமதப் பெயர்க் காரணம்

ஒரு நாட்டின் பெயராலோ அல்லது ஒரு நதியின் பெயராலோ நம் ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. இந்து மதம் என்ற பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும்.

இந்து என்ற சொல்லை இம்+து என்று பிரிக்கலாம். இம்=இம்சையில், து = துக்கின்றவர்; பிறர் துன்பத்தையும் கண்டு வருத்தம் கொண்டு, அவற்றைக் களைய முற்படுகின்ற சிறந்த குணம் கொண்டவர்களே இந்துக்கள் ஆவர்.

---

வசிஷ்ட தீர்த்தமும், கௌசிக தீர்த்தமும், மேற்கில் வருண தீர்த்தமும், அகலிகை தீர்த்தமும் ஆகிய பலப்பல புனித தீர்த்தங்கள் உள்ளன என்றும், மலையுச்சியில் சுனைவடிவாய் அமைந்துள்ள சம்பாதி தீர்த்தத்தில் மூழ்கினவர்கள் பெரும் பிணியிலிருந்து விடுபடுவார்கள் என்றும் இவ்வூர்த் தலபுராணம் கூறுகின்றது.

இத்தீர்த்தங்களின் மகிமையைக் கூறுகின்ற ஆசிரியர் அந்தகக்கவி வீரராகவ முதலியார் அவர்களின் பாடல்:

''காணினுங்கைதொடினு மள்ளித்
தெளிப்பினுமுட்கொ ரினும்
கணப்பொழுது முழுகினும் போய்க்கால்
வழுக்கி விழினும்
பாணிவிரி திரையினொரு பனித்திவலைபடினும்
படருங் காற்றணுகினு மெய்ப்
பாதகமுங்குடிபோம்
சேணுலகு தொழுமிந்தத் தடந்தொறு
நீர்முகந்து
செலுமடியோரயமேதத் திறநிகராம் விரதம்
பூணுமவர் படிந்தியற்றிலனந்தமெனப்பலிக்கும்
புராரியென்றுந் தீர்த்தமென்றும்
இரண்டிலையிப்புரிக்கே''

இத்தீர்த்தங்கள் இறைவன் வடிவே. வேறல்ல! இறைவனே இத்தீர்த்தம் என்று ஆசிரியர் இயம்புகின்றார்.

இவ்வாறு வேதமலை உச்சியில் இறைவன் எழுந்தருளியதும், மூர்த்தி, தலம், தீர்த்தமாகிய முப்பெருமைகள் வாய்ந்ததும், தெய்வ கழுகுகள் வந்து வழிபடுவதும், சித்தர், முனிவர் அறவோர் துறவோர் முதலிய பெரியோரின் இருப்பிடமானதுமாகிய புனிதமும் தெய்வ மணமும் கமழும் திருக்கழுக்குன்றத்தைச் சார்ந்து இறை வழிபாடு செய்து வாழ்த்தி வணங்கி நல்வாழ்வு பெறுவோமாக.


# எண் வகை யோகம்

டாக்டர் பொற்கோ
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600005.

(முன் தொடர்ச்சி)

உடலைப் பக்குவப்படுத்துவது பற்றியும் மனதைப் பக்குவப்படுத்துவது பற்றியும், பொதுவாகச் சில செய்திகளை முன்பே பார்த்தோம். அவற்றைப் பற்றி மேலும் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் தெரிந்து கொள்வதுதான் இப்போது நம்முடைய முதன்மையான நோக்கமாகும். மனத்துக்கே உரிய பல்வகையான வியத்தகு ஆற்றல்களை எய்தும் முன்பே மனத்துக்கும் உடலுக்கும் முழுமையான அமைதியை அளித்துப் பழக வேண்டும். அந்த அமைதியை அடைவதற்கு முன் ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ளவேண்டிய முயற்சிகளையும் பயிற்சிகளையும் அனுபவங்களையும் நமது முன்னோர்கள் மிக அழகாக வகைப்படுத்தி விளக்கியிருக்கிறார்கள்.

மனிதன் பிறந்தது முதல் அவன் வாழ்க்கையில் அவனுக்குள்ள சூழல் பெரும்பாலும் அவனுடைய இயல்பான தூய்மையைக் கெடுப்பதாகவும் அவனுடைய இயல்பான அமைதியைக் குலைப்பதாகவும் அவனுடைய இயல்பான மன ஒருமைப்பாட்டைக் கலைப்பதாகவும் அமைந்துள்ளது என்ற உண்மையை நாம் ஒவ்வொருவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொண்டால் தான் தூய்மையைக் காத்து வளர்க்கவும், அமைதியை-மன ஒருமைப்பாட்டை எய்தவும் இடைவிடாது நாம் முயற்சி மேற்கொள்ளவாவது இயலும். நமது வாழ்வில் எவ்வளவு காலம் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடக்கிறதோ அவ்வளவு காலம் நாம் நலமாக வாழலாம். எப்போது இந்தப் போராட்டம் தடைப்படுகிறதோ அப்போது நம் வாழ்வு வலுவிழக்கிறது என்று பொருள். இந்தப் போராட்ட உணர்வு எப்போது நம்மிடம் அறவே மங்கி மக்கிப் போகிறதோ அப்போது வாழ்வு முடியத் தொடங்கிவிட்டது என்று பொருள். ஆகவே, நம்முடைய பயணம் தூய்மையை நோக்கியும் அமைதியை நோக்கியும் மன ஒருமைப்பாட்டுடன் தொடருகிறது என்ற உணர்வு நமக்கு வேண்டும்.



அன்றாட வாழ்வில் நாம் சில அடிப்படையான ஒழுங்கு முறைகளைப் பின்பற்றினால் மிகப் பல அருஞ்செயல்கள், நமக்கு எளிதாகவே முடியும். அப்படிப் பட்ட ஒழுங்கு முறைகளை யோக நூலார் இயமம், நியமம் என்று இரண்டாகப் பிரிப்பர். தகாதவனவற்றை விலக்குதல் இயமம் என்பதில் அடங்கும். தக்கனவற்றை மேற்கொண்டு ஒழுகுதல் நியமம் என்பதில் அடங்கும். தக்கன இவையிவை, தகாதன இவையிவை என்று நம்முடைய அறநூல்கள் தெளிவாக விளக்கிப் பேசுகின்றன. பொய், கொலை, கள், களவு, காமம் ஆகிய இந்த ஐந்தும் பல நூற்றுக்கணக்கான தீமைகளுக்கு ஆணிவேர் போல அமைந்தவை. ஆதலால் தான் இவற்றை ஐம்பெரும் தீமைகள் என்றனர். இவற்றை விலக்குதல் இயமமாம்.

ஐம்பெரும்தீமைகளுக்கு இடங்கொடுத்துவிட்டால் அதற்குப் பிறகு ஆயிரக் கணக்கில் விளையுந் தீமைகளைக் கட்டுப்படுத்த இயலாது. அதனால்தான் தீமைகளை முளையிலேயே கிள்ள வேண்டும் என்று நமது முன்னோர்கள்

# பட்டினத்தார் உபதேசம்



பட்டணத்து சுவாமிகள்.

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு
உயர் செல்வமெலாம்
அன்றென்றிரு, பசித்தோர் முகம் பார்
நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு, நடுநீங்காமலே
நமக்கிட்டபடி
என்றென்றிரு., மனமே!
உனக்குப தேசமிதே.

அறிவுறுத்தி உள்ளார்கள். இந்த ஐம்பெருந் தீமைகளைப் பற்றி நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டியது முக்கியம். உள்ளதை இல்லையென்று சொல்லுவதை மட்டுமே பொய் என்று நாம் கருதுகிறோம். பொய் என்பது மேலும் பல செய்திகளை உள்ளடக்கிய ஒன்று.

மொழி என்பது மனிதனுக்கு மட்டுமே கிடைத்த ஒரு மாபெருங்கருவி. அந்தக் கருவியை அவன் பிறரை ஏமாற்றுவதற்காகவும் குறுக்கு வழியில் தன்னை வளர்த்துக்கொள்வதற்காகவும், தன்னுடைய உள்ளுணர்வுக்கு மாறானவகையில் ஆளுவானானால் அவன் பேச்சு எல்லாவற்றையுமே நாம் பொய் என்ற தீமையில்தான் அடக்க வேண்டும்.

மனிதனை மனிதன் நம்புவதும், சமுதாய வாழ்க்கை அமைதியாக நடைபெறுவதும், மனித ஆற்றலால் மிகப்பெரிய அருஞ்செயல்கள் நடப்பதும் ஆகிய இவையெல்லாம் மொழியின் துணையினால் தான் நிகழ்கின்றன. மொழி என்ற கருவியை, அதாவது பேசுந்திறமையை மக்கள் தவறாக ஆளத் தொடங்கி விட்டால் வாழ்க்கையெல்லாம் அவநம்பிக்கையும் சந்தேகமும் மலிந்து மனித வாழ்க்கை சீரழிந்து போகும். ஆகவேதான் பொய் என்பது விலக்கத் தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது.

தனி மனித வளர்ச்சிக்குத் தடையான மனிதர்களையும், தனி மனிதனுடைய தவறுகளை வெளிப்படுத்திக் காட்டத் தக்க வகையில் சாட்சியாக உள்ள மனிதர்களையும் ஒரு மனிதன் தந்திரத்தாலோ வலிமையாலோ கொலை செய்வானானால் அவன் வாழ்க்கை திசைமாறி அவனுடைய நோக்கமும், பிறழ்ந்து அவன் அமைதியிழந்து அழிய நேரும்.

மனிதர்களைக் கொல்லும் கொலையோடு மற்ற விலங்குகளைக் கொல்லும் கொலையும் மனிதனின் அருள் உணர்ச்சியை அழிக்கிறது. அருள் உணர்ச்சி ஒன்றுதான் மனித மனத்தை மிக விரைவில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லவல்லது. ஆகவேதான் கொலையினையும் விலக்கத் தக்க ஒன்றாகக் கொள்ளுகிறோம்.

நாம் உட்கொள்ளும் எல்லாவகை உணவுகளையும் விட மது வகைகளுக்கு மட்டுமே நமது புலன்களைத் தன்வயப்படுத்தி ஆளத் தக்க வலிமை உண்டு. குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஒருவன் தன்னைத்தான் ஆள முடியாமல் தன்னை மது வகைகளிடம் ஒப்படைத்து விடுகிறான். குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டவன் எந்தக் காரியத்தையும் அளவறிந்து செய்ய முடியாமல் போகிறது.

அந்த நிலையில் குறித்த வேலையைக் குறித்த நேரத்தில் குறித்த முறையில் செய்ய இயலாமல் தவிக்கின்ற அவன், தனக்கும் சமுதாயத்துக்கும் இடையேயுள்ள உறவையும் சீர்குலைக்கிறான். ஆகவேதான் குடிப் பழக்கத்தையும் விலக்கத்தக்க ஒன்றாகக் கொள்ளுகிறோம்.

உழைத்து ஈட்டிய ஒருவனது பொருளை எவ்வித உழைப்புமில்லாமல், பொருளுக்கு உரியவனுக்கும் தெரியாமல் கவர்ந்து கொள்ளுவதெல்லாம் களவுதான். உரியவனுக்குத் தெரிந்தே பறித்துக் கொள்வது கொள்ளை. களவும் கொள்ளையும் ஒரு சமுதாயத்தில்வளருமானால் உழைப்பவர் தொகை தானே குறைந்து விடும். உழைப்பு இல்லாமல் எந்தச் சமுதாயமும் எந்த நாடும் உயர முடியாது. உழைப்பதற்கு விருப்பமில்லாமல் சுகபோகங்களை அனுபவிப்பதிலேயே குறியாக இருக்கின்ற கூட்டம் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் அழிவு விளைவிக்கின்ற கொடிய நோய் என்றேசொல்ல

லாம். சமுதாய நல்வாழ்வுக்குக் களவு என்பது மாபெரும் பகை. அதனால் தான் களவும் விலக்க தக்க ஒன்றாகக்கொள்ளப்பட்டது.

காமம் என்பதை நாம் எப்போதும் பாலுணர்ச்சியோடு தொடர்பு படுத்தியே நினைக்கிறோம். மேலும், மேலும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையெல்லாம் காமந்தான். சுகபோகங்களை அனுபவிக்க வேண்டும் என்பதி லேயே ஒருவனுக்கு நாட்டம் ஏற்பட்டுவிட்டால் அவன் உழைப்பதற்கும் பிறருக்கு உதவுவதற் கும் தகுதியற்றவன் ஆகிறான். அப்படிப்பட்ட மனிதன் நாளடைவில் சமுதாயத்தில் புறக் கணிக்கப்பட்டு மனித நிலையிலிருந்து தாழ்ந்து போகிறான். அதனால்தான் காமம் என்பதும் விலக்கத்தக்க ஒன்றாயிற்று.

கொஞ்சம் கற்பனைத் திறனைப் பயன் படுத்தி அமைதியாக எண்ணிப் பார்த்தால் இங்கே கூறிய ஐந்து தீமைகளும் பல ஆயிரக் கணக்கான தீமைகளை உருவாக்குகின்ற ஆணி வேர்கள் என்பது நன்றாகப் புலப்படும். இந்தத் தீமைகளை விலக்கினால்தான் மனிதன் சமு தாயத்தில் ஒரு உறுப்பாக வாழ இயலும். இந்த தீமைகளை விலக்காதவன் சமுதாயத்தில்வாழத் தகுதியற்றவன். சமுதாயத்திற்கு நோய்போன்ற வன். இந்தத் தீமைகளை விலக்க வேண்டும் என்ற வைராக்கியம் எவன் மனத்தில் ஏற்படு கின்றதோ அவன்தான் மனிதன்.

நல்ல உடலையும், நல்ல மனத்தையும் பெறவிரும்பும் ஒருவன் தீமைகளுக்கெல்லாம் மூல ஊற்றாக விளங்கும் ஐம்பெருந் தீமைகளை விலக்க வேண்டும் என்ற வைராக்கியத்தைப் பெறவேண்டும் என்று முன்பே குறிப்பிட்டி ருந்தோம். தீமைகளை விலக்கி நன்மைகளில் நம்மை இணைத்துக் கொள்ளுகிற மன உறுதி யைத்தான் வைராக்கியம் என்கிறோம்.

தேவையான மனஉறுதியை வைராக்கியம் என்றும், நெறிதப்பிய மன உறுதியைப் பிடி வாதம் என்றும் சொல்லுகிறோம். தீமைகளி லிருந்து நம்மை விலக்கவும் நன்மையோடு நம்மை இணைக்கவும் நமக்கு வைராக்கியம் வேண்டும்.

நன்மை, தீமை என்பனவும், புண்ணியம் பாவம் என்பனவும், அறம், மறம் என்பனவும், சரி, தவறு என்பனவும் மிகவும் நெருக்கமான பொருளுடைய சொற்கள். பொதுவாக மக்கள் கருதும் நன்மைகளும் இலக்கியப் புலவர்கள் கூறும் அறமும், சமயவாதிகள் கூறும் புண்ணிய மும் ஏறத்தாழ ஒரே பொருளுடைய சொற் களே.

அதே போல, தீமை, பாவம், மறம் ஆகி யனவும் ஏறத்தாழ ஒரே பொருளுடைய சொற் களே. சரி, தவறு என்பது பொதுவாக எல் லோருக்கும் எளிதில் விளங்கும் சொற்கள். இவற்றையே தக்கன தகாதன எனவேறு சொற்களாலும் குறிப்பர். எதுசரி, எது தவறு என்பதை நாம் வாழும் சமுதாயமும் நமது முன்னோர்களின் நூல்களும் நமக்கு இடை விடாது உணர்த்தி வருகின்றன. இவற்றிற்கெல் லாம் மேலாக ஒவ்வொரு மனிதனிடமும் உள்ள உள்ளுணர்வு எதுசரி, எது தவறு என்பதை மிகத் தெளிவாக உணர்த்தி வருகிறது.

## எது நாகரிகம்?

''பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டு பவர்''
என்றார் வள்ளுவர்.

நாகரிகம் என்பது ஆடை அணிமணிகள், கிராப் வெட்டிக் கொள்வது என்பது மட்டு மல்ல, மனித வாழ்க்கையில் சில நாகரிகங்கள் உண்டு. எதிரி கொஞ்சம் கடுமையாகப் பேசி விட்டாலும் கூட, சபையறிந்து அவனை ஜாக்கிரதையாகச் சமாளித்துச் செல்வது என் பது ஒருவகை நாகரிகம்.

நண்பனுடைய வீட்டுக்குப் போகும் போது அவனுடைய குழந்தை மோசமாக மூக்கு வடிந்து கொண்டிருந்தாலும் கூட, அதைத் தூக்கித் துடைத்துவிட்டு ''ஆஹா! என்ன அழகான குழந்தை'' என்று சொல்வது ஒருவகை நாகரிகம்.

நண்பனுடைய வீட்டுச் சாப்பாடு நன் றாக இல்லாவிட்டாலும்கூட ''அற்புதமான சாப்பாடு'' என்று சொல்லிவிட்டு வருவது ஒருவகை நாகரிகம்.

போகின்ற இடங்களிலே நடந்துகொள் கின்ற முறையையே நாகரிகம் என்றார்கள்.

இந்த நாகரிகம் என்ற வார்த்தை பிற் காலத்திய வார்த்தை என்று நான் கருதிக் கொண்டிருந்தேன். வள்ளுவருடைய குறளை படித்தபோதுதான் 2000 ஆண்டுகளுக்கு முன் னாலேயே அது இருந்திருக்கிறது என்பது எனக்குத் தெரிந்தது.

—கவிஞர் கண்ணதாசன்

சரி, தவறு என்பதை எப்படி நாம் முடிவு செய்யலாம்? எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்று நிலைகளில்தான் நாம் சரி தவறு என் பதைப் பற்றிப் பேசுகிறோம்.

ஒரு செயல் தோன்றுவதற்கு உரிய கார ணம், நோக்கம் ஆகிய இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் அந்தச் செயல் சரியா? தவறா என்று கூற முடியும். ஒரு செயலுக்கு உரிய காரணமும் நோக்கமும் தெரியாத பொழுது அந்தச் செயலைச் சரி என்றோ தவறு என்றோ முடிவு செய்ய முடியாது.

தன் குழந்தையின் மீது உள்ள அன்பின் காரணமாகவும், தன் குழந்தை சிறந்த சான் றோனாக விளங்கவேண்டும் என்ற நோக்கத் தோடும் தாய் தன் குழந்தையைச் சில வேளை களில் அடிக்கிறாள். இந்தச்சூழலில் தாய் குழந்தையை அடிப்பதைத் தவறு என்று சொல்ல முடியாது. ஒரு குழந்தையிடம் உள்ள பொருள் ஒன்றைப் பறித்துக் கொள்வதற் காக இன்னொரு குழந்தை எளிய குழந்தையை அடிப்பதாக வைத்துக் கொள்ளுவோம்.

இந்தச் சூழலில் ஒரு குழந்தை இன்னொரு குழந்தையை அடிப்பது தவறு என்கிறோம். நோய்வாய்ப்பட்ட ஒருவனை மருத்துவர் பரிசோதித்து ஆயுதங்களால் அவன் உறுப்பை அறுத்து மருத்துவம் செய்கிறார். நோயாளியிடம் நல்ல விளைவுகள் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்தில் மருத்துவர் செய்யும் செயலைச் சரி என்கிறோம்.

கத்தியைக் காட்டி அச்சுறுத்தித் திருடன் ஒருவன் இன்னொருவனிடம் கொள்ளை அடிக்கும்போது அதைத் தவறு என்கிறோம். சரி எது தவறு எது என்பதைப் பற்றி இப்போது ஓரளவு விளங்கி இருக்கும். நன்கு எண்ணிப் பார்த்தால் சரி தவறு என்பதெல்லாம் அந்தச்செயலுக்குரிய காரணங்களையும், விளைவுகளையும்பொறுத்ததாகவே அமைகிறது.


சரி தவறு என்பவற்றைப் பற்றிக் காரண காரிய நோக்கில் நாம் ஆராய்ச்சி செய்வது ஒரு பக்கம் இருக்கட்டும். பொதுவாக நம்முடைய உள்ளுணர்வு சரி தவறு என்பவற்றைப் பற்றிப் பெரும்பாலும் மிகச்சரியாகவே நமக்கு உணர்த்தி விடுகிறது. அந்த உணர்வுக்கு நாம் நம்முடைய வாழ்வில் உரிய மதிப்பளித்தால் கூடப் போதும், தவறுகள் தாமாகவே குறைந்து விடும்.

சரியான எண்ணம், சரியான பேச்சு, சரியான செயல் ஆகிய இந்த மூன்றிலும் நாம் கவனமாக இருந்தால் நன்மைகள் எல்லாம் தாமே பிறக்கும்.

மனித வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய நன்மைகள் பற்றியும் வாழவேண்டிய நல்வாழ்வு பற்றியும் அற நூல்கள் ஏராளமாக எடுத்துக் கூறி உள்ளன. சரி, தவறு பற்றிய உணர்வுகளை உண்டாக்கவே இந்த நூல்கள் எல்லாம் முயல்கின்றன. சரி தவறு பற்றிய உணர்வு, விளக்கம் பெற்று விட்டால் அந்த நூல்களின் துணை இல்லாமலேயே நம்முடைய வாழ்வு அறஞ் சிறந்த வாழ்வாக அமையும்.

தக்கனவற்றை மேற்கொண்டு ஒழுகும் நியமம் என்பதன் உயிர்நாடி சரி, தவறு என்பதைப் பற்றிய உள்ளுணர்வே எனலாம். இதனை அடுத்த இதழில் விளக்கமாகக் காணலாம்.

---



## ஓம் முருகா என்று சொன்னேன்

யாமிருக்கப் பயமேன் என்றான்
முருகன் நான் பயம்விட்டேன்
வேலும் மயிலும் துணை என்றான்
வேலன் நான் துணை கொண்டேன்

(யாமிருக்க)

உறுதிமனம் காண்பதற்கே
சோதனைகள் செய்வேன் என்றான்
'செய்க' என்று நான் சொன்னேன்
வறுமையிலே தள்ளிவிட்டான்
''ஓம்முருகா'' என்று சொன்னேன்
ஓடிவந்து தாங்கிக் கொண்டான்.

(யாமிருக்க)

சந்நிதிக்கு வா என்றான்
வரும் வழியில் வனிதையரை
நடமாட வைத்துமனம்
சஞ்சலத்தில் வாட வைத்தான்
''ஓம்முருகா'' என்று சொன்னேன்
ஓடிவந்து கூட்டிச் சென்றான்.

(யாமிருக்க)


வாழ்வதற்கு வடிவேலா
வேலைதர வேண்டுமென்றேன்
வேதனைகள் கூட்டிவைத்தான்
வேலையவன் தரவில்லை
''ஓம்முருகா'' என்று சொன்னேன்
ஓடிவந்து வேல் கொடுத்தான்
வேல் எதற்கு என்றனுக்கு?
பார் காக்க அதுஉனக்கு
நான் கேட்ட வேலை முருகா

நலம் சேர்க்கும் வேலை என்றேன்
ஓர் நொடியில் அவன் கொடுத்தான்
புகழோடு வாழ வைத்தான்
பொருளோடும் வாழவைத்தான்.


(யாமிருக்க)

—டாக்டர் த. அமிர்தலிங்கம்

# ஒரு மறைந்த ஆலயம் மறுபடியும் மலர்கின்றது



சென்னை திருவான்மியூரை அடுத்தமைந்திருக்கும் சிறிய கிராமம் நீலாங்கரைக் குப்பம். இந்த நீலாங்கரைக் குப்பத்தில் ஒரு காலத்தில் மிகச் சிறப்புற்றிருந்த ஆலயமே அருள்மிகு நீலகண்டேஸ்வரர் ஆலயம். பல்லவ மன்னரால் எழுப்பப்பெற்ற பழமைச் சிறப்புடைய இவ்வாலயம், எக்காரணத்தினாலோ இடைக்காலத்தில் மறைந்து விட்டிருந்தது., நம்முடைய அறநிலையத்துறை எடுத்துக்கொண்டுவரும் அக்கறையினாலும், ஊர்மக்கள் முயற்சியினாலும் மறைந்த நீலகண்டேஸ்வரர் ஆலயம் மறுபடியும் சுற்றுச் சுவர்களுடன் புதுப்பிக்கப் பெற்று வருகிறது. அறநிலையத்துறையின் பொற்காலம் இக்காலமே என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று காட்டமுடியும்?



அருள்மிகு நீலகண்டேஸ்வரர் ஆலயத் திருப்பணி துவக்கப்பட்ட காட்சி.



பழனியில் தைப்பூசத் தேர்த்திருவிழா நடைபெற்றது
ஆலயத்தக்கார் திரு க. பொன்னுசாமி, ஆலயத்தின் துணை ஆணையர்
திரு. K. S. சோமசுந்தரம் ஆகியோர் முன்னின்று தேர்த்திருவிழாவைச் சிறப்புற நடத்தினர்.

நான் என்ன கைம்மாறு செய்யவல்லேன். தேவரீரை என் உயிருள்ளவரை பூசிப்பேன். நேசிப்பேன்' என்றெல்லாந் துதித்தான். எல்லோரும் அவருடைய அடிமலர் மீது தொழுதார்கள்.

அவரைப் புஷ்ப ரதத்தின் மீது ஏற்றி குடை, சாமரம், ஆலவட்டம் முதலிய உபசாரங்களுடன் மேள தாளங்கள் முழங்க விண்ணுலகம் அதிருமாறு, வாண வேடிக்கையுடன் ஊர்வலம் செய்தார்கள்.

முனிவர் சிந்திக்கின்றார். இது என்ன விந்தை' ஒரு விநாடியில் நமக்கு இத்துணைச் சிறப்பும் இராஜ மரியாதையும் நகர்வலமும் நடைபெறுகின்றன. மன்னவனைக் காலால் உதைத்தேன். என் காலை வெட்டித் தண்டிக்க வேண்டிய மன்னன் காலில் வீழ்ந்து அடிமையாகி நிற்கின்றான். இது திருமகள் அநுக்கிரகம். முடியிலிருந்து அவள் சர்ப்பமாக வந்து இத்தனைக் கூத்தும் புரிகின்றாள், அவள் இன்னும் என்ன என்ன திருவிளையாடல் செய்யப்போகின்றாளோ? என்று எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டார்.

அரண்மனைக்கு அருகில் உள்ள பூங்கா வனத்துக்கு இடையில் கட்டியுள்ள சந்தன மாளிகையில் முனிவரைப் புதிய வெல்வெட்டு விரித்த ஆசனத்தில் அமர வைத்து மன்னன், மன்னனுடைய மனைவி, மகள் முதலியோர் மயில் விசிறி எடுத்து விசிறி பால், பழம், தேன், இளநீர் தந்து உபசரிக்கின்றார்கள். அதல பாதாளத்தில் இருந்த ஒருவனை இமயமலையின் உச்சியில் அமர்த்தியது போல் இருந்தது. காட்டில் தனித்துப் போற்றுவார் ஒருவருமின்றி காய், சருகு உண்டிருந்த முனிவர் இன்று இராஜபோசாரத்துடன் தங்கப்பிடியிட்ட வெண்சாமரம் மன்னவனே வீச பஞ்சு மெத்தையிட்ட தந்தக்கட்டிலில் வீற்றிருக்கின்றார்.

இப்படி சில தினங்கள் கழிந்தன. முனிவர் முடிமன்னனை நோக்கித்தான் கானகம் போக வேணும் என்றார். மன்னவன் மறுத்து 'தேவரீர் இங்ஙனமே இருந்து எங்களை உய்விக்கவேண்டும்'' என்றான்.

மீளவும் இலட்சுமி...
...சோதிக்க நினைத்தார். நடு இ...
...சமாதேவியும் ஒரு கட்டிடத்துக்குள்
...தின் மீது பள்ளிகொண்டு உறங்கிக்
...தார்கள். முனிவர் அந்த படுக்கை
...ள் நுழைந்து மன்னவன் முதுகிலும்,
...னியின் முதுகிலும் பளார் பளார் என்று
அடி கொடுத்து, இருவருடைய கரங்களைப்
..., கரகர என்று மாடுகளை இழுத்து வருவது
இழுத்துக்கொண்டு வெளியே வந்தார். இது
...ணை அடாத செயல். அரசருடைய படுக்கை
...ில் மற்றவர் நுழையலாமா? கோப்பெருந்
...யை மற்றவர் தீண்டலாமா? தீண்டி அடிக்
...மா? தலை போகின்ற காரியம்.

மன்னவன் இன்னதென்றறியாமல் திகைத்து நின்றான். இலக்குமிதேவி திடுக்கிட்டாள். தவ முனிவர் திடீர் என்று இந்த அடாத செயலைச் ...ய்து நம்மைச் சோதிக்கின்றாரே! நாம் அவரிடம் ...ங்கியிருக்கின்ற போது அவருக்கு ஒரு அவமரி...தை வரக்கூடாதே என்று எண்ணினாள். உடனே ...மகள் செயலால் அரசன் படுத்திருந்த கட்டிடம் திடீர் திடீர் என்று இடிந்து விழுந்தது. இதைக் கண்ட மனனவன் ஆ! ஆ! நான் இதன் உள்ளே படுத்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தேனே. கட்டிடம் இடியப்போவதை அறிவுக் கண்ணால் அறிந்த அருந்தவ முனிவர் என்னைக் காக்குங் கருணையால் இங்ஙனஞ் செய்தனர். இல்லையேல் நானும் என் தரும பத்தினியும் மாண்டு ஒழிந்திருப்போம். இப்பேராபத்திலிருந்து என்னைக்கருணை மேலீட்டினால் காத்தருளினார்.

''செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது'

இந்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்தாலும் ஈடாகுமா? வாழ்நாள் முழுவதும் நாம் இவருக்கு மீளா அடிமையாகி வாழ்வதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்'' என்று எண்ணிய பராந்தகன் மாதவருடைய மலரடியைப் பலகாலும் பணிந்து எழுந்தான். கண்ணீரால் அவருடைய கால்களைக் கழுவினான்.

இச்செயலைக் கண்ட முனிவருக்கு அதி ஆச்சரியம் ஏற்பட்டது. திருமகளின் கருணைத் திறத்தை நினைந்து நினைந்து விம்மிதம் அடைந்தார். கமலாசனியின் கருணையின் வலிமை தான் என்னே? உலகமெல்லாம் இறைஞ்சும் இந்தக் கோமானை கோவணாண்டியின் கால்மேல் வீழ்ந்து வணங்குமாறு செய்கின்றாள். தேவியின் பெருமையே பெருமை. அவளின் அருளிருந்தால்துரும்பும் அரசு புரியுமோ. அம்மம்ம? நினைக்கவும் முடியாத அற்புதம். செய்யத்தகாத செயலைச்செய்த எனக்குச் சிறப்பின் சிகரம் சேர்கின்றது என்று சிந்தித்தார். தேவியை வந்தித்தார்.

இவ்வாறு முனிவர் சில காலம் அரசு மரியாதைகளுடன் மிக உயர்ந்த சுகாசனங்களில் அமர்ந்து எல்லோருடைய வணக்கங்களுக்கும் உரியராய் விளங்கினார்.

ஒருநாள் இரவு இலட்சுமிதேவி அவருடைய கனவில்தோன்றி 'முனிவரே, நான் நாளை காலை உம்மைவிட்டு அகலுவேன். இனி உமக்கு இங்கு

முனிவ... மாம்பழத்தை ...டிக்கொலைய... துண்டையுண்டான். உடனே மயங்கி வீழ... அரச வைத்தியர்கள் வந்தார்கள். அம்மாம்பழத்... நஞ்சு கலந்திருக்கின்றதென அறிந்தார்கள். நஞ்சு தணியும் நன் மருந்தை நல்கினர். பராந்தகன் குணமடைந்தான்.

அக்கனி அரண்மனை நந்தவனத்தில் பழுத்தது. அது மரத்தில் இருக்கும்போது நல்ல நாகம் அதில் நஞ்சைக் கக்கியிருந்தது. முனிவர் இக்கனி நஞ்சு கலந்த தென்பதை அறியாது மன்னனிடம் முதல் நாள்மாலை தந்தார்.

மன்னவன் ''ஓ'' இந்த முனிவர் இப்பழத்தில் நஞ்சூட்டி நம்மைக்கொன்று அரசுரிமையைக் கைப்பற்றக் கருதினார் போலும். இவரைக் கொல்வது நல்லதன்று. முன் இருமுறை நம் மரணத்தைத் தடுத்து உதவி செய்தவர்.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

ஆதலால் இவருடன் இனி பழகக்கூடாது என்று தன் மனதுக்குள் நினைத்து, தன் ஏவலரிடம் முனிவரை யாதொரு இடையூறும் இன்றிக் காட்டில்விட்டு வருமாறு கட்டளையிட்டான்.

காவலர் முனிவரை அழைத்துப்போய் கானகத்தில் விடுத்து ''முனிவரே? எமது மன்னரைக் கொல்லுமாறு நீர் நஞ்சு கலந்த கனியைத் தந்த காரணத்தால் உம்மை மன்னர் அகற்றிவிட்டார். இனி நகருக்குள் வராதீர்; வந்தால் தலைபோகும்'' என்று கூறிச் சென்றார்கள்.

முனிவருக்குச் சிரிப்புத்தான் வந்தது. ''ஆ! திருமகள் செய்யும் திருவிளையாடல்தான் என்னே! அவள் விலகிய அடுத்த கணத்தில் எனக்கு அரச மாளிகையில் இடமில்லை. அன்றியும் அரசனுடைய வெறுப்பும் ஏற்பட்டது. திருமகள் கடாட்சம் இருந்தால் தீமையும் நன்மையாகும். அவளுடைய கடாட்சம் இல்லையேல் நன்மையும் தீமையாக முடியும். நான் தந்த மாம்பழம் நஞ்சாக மாறி எனக்கு இந்த நிலையமைத்தது. நான் சுகத்தை விரும்பாதவன். துக்கத்தை வரவேற்கின்றவன். சாமானியமான மனிதர்கள் என்றால், கதி கலங்கி, மதி மயங்கி அதிக வேதனை அடைவார்கள். நேற்று அரச போகம். இன்று காட்டில் நிற்கும் யோகம். தேவி? நின் திருக்கூத்தை யறிந்தேன். சிலகாலம் என்பால் தங்கி வேண்டாம்என்ற உயர்ந்த சிறப்பையெல்லாம் எனக்கு வலிதில் தந்து விளையாடினாய். அம்மா! நீ ஆண்டியை அரசனாக்குவாய். அரசனை ஆண்டியாக்குவாய்; துரும்பை இரும்பாக்குவாய்; இரும்பைத் துரும்பாக்குவாய். குட்டிச் சுவரை அரண்மனையாகச் செய்வாய். அரண்மனையைக் குட்டிச் சுவராக்குவாய். உன்னால் எல்லாம் ஆகும் தாயே! உனக்கு வணக்கம்'' என்று தேவியைத் தொழுதுவிட்டு, எப்போதும் போல் மனத்தையடக்கித் தவஞ் செய்யத் தொடங்கினார்.

# தெய்வத்துணை

'அருள்மொழியரசு'
திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

ானகத்தில் ஒரு சந்நியாசி நெடுங்காலமாகத் செய்து கொண்டிருந்தார். அவர் சிறந்த ும் உயர்குண நலனும் உடையவர். ஒரு ட மனத்துடன் புலன்களை வென்று தவ ாக அவர் திகழ்ந்தார். அக்கானகத்தில் கொடிய விலங்கினங்களும் அவரிடம் போல் அடங்கி அன்பு செய்தன.

வர் பெருமான், பச்சிலைகளையும், களையும், கிழங்குகளையும், நீரை கொண்டு உடம்பை வாட்டி, வினை தவசீலராகத் திகழ்ந்தார்.

வர்முன் மகாலட்சுமி தேவி தோன் ளித்தனர். முனிவர் திருமகளைத்

திரா! நீ முன்னே செய்த நல்வினைப் ணமாக சிலநாள் நான் உன்னிடம் தங்கி போகிறேன்''.

''தாயே! நான் தவத்தையே தனமாகக்கொண் டவன். வெறுக்கை (செல்வம்) மீது வெறுக்கை யுற்றவன். உமது கருணையும் அதனால் வரும் செல்வமும் நாட்டில் இல்லறத்தாருக்கல்லவா வேண்டும். என்னிடம் நீ இருந்து பயனில்லையே''

''தபோதனரே! இப்போது உனக்கு செல்வம் வேண்டாம் என்றிருக்கலாம். முன்னே நீ செய்த புண்ணியத்தின் பயனாக உன்னிடம் குறிப்பிட்ட ஒரு காலம்வரை இருக்கத்தான் வேணும். இது இறைவனுடைய அருளாணையின் நியதி. நான் உன்னிடம் இருக்கும்போது உனக்கு எல்லாம் நன் மையாகத்தான் முடியும். ஒரு பயமும் வராது. உனக்கு சகல சித்திகளும் உண்டாகும். அரச மரி யாதைகள் கிடைக்கும். உலக மக்கள் மதித்துக் கொண்டாடி உபசரிப்பார்கள்'' என்றாள்.

முனிவர் ''அம்மா! எல்லாம் ஈசன் செயல். உன் கருணாகடாட்சப்படி நடக்கட்டும்'' என்றார்.

அவரிடம் லட்சுமியின் பரிபூரண அருள் பதிந் தது.

முனிவர் நீராடித் திரும்பும் வழியில் ஒரு பெரும் புதையல் வெளிப்பட்டது. அதில் தங்கப் பவுன்கள் நிறைந்திருந்தன. லட்சுமி கடாட்சம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால் அவருடைய கால டியில் அது வந்தது. அவரோ ஆசாபாசம்விட்டவர். அதைக்கண்டு சிரித்தார். தேவி! இது எனக்கு ஏன்? தலைமயிர் இல்லாதவருக்கு மலர்ச்செண்டால் என்ன பயன்? தவஞ்செய்கின்ற எனக்கு இப்பணம் எதற்கு? என்று கூறி அதனைத் தீண்டாமலேயே தான் தவஞ்செய்யும் மரத்தடியடைந்தார்.

மறுநாள் முனிவர் ''நம்மிடம் திருமகள் தங்கி யிருக்கின்றாளே ! அரச மரியாதை கிடைக்கும் என்றாளே! இதை சோதித்துப்பார்ப்போம்'' என்று எண்ணினார்.

அந்தக் காட்டுக்கு அருகில் இராஜசேகரம் என்ற ஒரு நகரம், அதனைப் பராந்தகன் என்ற அரசன் அரசுபுரிந்து வந்தான். முனிவர் அரசவை சென்றார். பெரிய மண்டபம். அமைச்சர்கள், பிர தானியர்கள், ஏனைய பரிசனங்கள் புடை சூழ மன்னர் பெருமான் அரியணை மீது அமர்ந்திருந் தான். முனிவரைக்கண்டு எழுந்து எதிர்வந்து தொழுதான்.

முனிவர் அம்மன்னவன் தலையில் இருந்த மணிமகுடத்தைக் காலால் எட்டி உதைத்தார்; தேவியின் சொல்லை சோதிக்குமாறு இவ்வாறு செய்தார்.

சபையில் உள்ளவர்கள் ஆ! ஆ! என்று அலறி னார்கள். அமைச்சர்கள் திடுக்கிட்டார்கள். மன்ன வன் மனம் பதறியது. அந்த ஒரு கணத்தில் அந்த சபையே ஆடிவிட்டது; முனிவருக்கு என்ன ஆபத்து வருமோ என்று எல்லோரும் எண்ணினார்கள்.

இலட்சுமிதேவி முனிவருடைய நடையை நோக்கிப்புன்னகை புரிந்தாள். இந்த முனிவனிடம் நாம் அருள் புரிந்தால் இவன் வெறி பிடித்தவன் போல் இப்படி மன்னவனுடைய மணி மகுடத்தை உதைத்தானே என்று கருதினாள். உடனே திரு மகள் அருளால் அந்தக் கிரீடத்திலிருந்து ஒரு நாகப் பாம்பு வெளிவந்து படம் எடுத்து ஆடியது. இதைக் கண்ட அரசனும் அவையோரும் அதி அற்புதங் கொண்டார்கள். ஆ! முனிவர் பெருமான் திரிகால ஞானி, நமக்கு வர இருந்த இடரைக் கருணையி னால் தவிர்த்தருளினார்.

இந்தப்பாம்பு முடிக்குள் நுழைந்திருக்கவேண் டும். நான் இதை அறியாமல் எடுத்துத்தலையில் அணிந்துகொண்டேன். ஆ இந்தப்பாம்பு கடித்திருந் தால் நான் மாண்டுபோவேன். இதைக்கானகத்தில் தவஞ்செய்யும் இவர் யோகக் காட்சியால் கண்டு, நாகப்பாம்பு கடித்து அதனால் நான் மாளாது வாழும்பொருட்டு என்னைக் காத்தருள வேண்டி வந்து உதவி செய்தார் என்று மன்னவன் நினைத் தான்.

மாதவ முனிவருடைய மலரடி மீது பலமுறை வீழ்ந்து வணங்கினான். 'சிறியேனை வாழவைத்த தெய்வமே! என் இடர் களைந்த எந்தை பெரு மானே! குடிமுழுதாண்ட குருமணியே! தங்கட்கு

லயத்தில் ...ற்கில் உள்ள சண்முக ...ம் விசேடமானது. திருவிழாக்காலத்தில் சுவாமி, தீர்த்தம் ஆடுவதும் இங்கேதான். இதன் அருகில் அமைந்துள்ள திறந்த வெளி அரங்கில் திருமுறை அரங்குகள், சமயவிரிவுரைகள், இசை அரங்குகள் நடைபெறுவது வழக்கம். இதிலும் காலத்தைப் பொன்னாகக் கருதி தேவையற்ற பேச்சுகளுக்கு இடம் கொடாமல் கண்காணிக்கப்படுகிறது. மேலும் சினிமாப் பாடல்கள் ஒலிபெருக்கியில் அலறிப்புலன்களைச் சிதறடிக்காத ஆலயம் இதுவாகும். திருமுறைப் பாடல்களே ஒலி பரப்பப்படும்.

கோயிலின் வடக்கேயுள்ள நந்தவனம் நிலப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ கொடுத்து உதவுகிறது. ஒரு புனிதமான அறையில் ஓதுவார் இனத்தைச் சேர்ந்தவர்களால் சுவாமிக்கு வேண்டிய மலர்மாலைகளால் சுவாமி அலங்கரிக்கப்பட்டு வீதிவலம் வரும்போது, அடியார்கள் ''மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து'' நிற்பதைக் காணலாம்.

''குமாரதந்திரம்'' என்ற சிறப்பான ஆகமத்தின் படியே இக்கோயிலின் நித்திய நைமித்திக பூசைகள் நடைபெறுகின்றன. தினமும் ஆறு காலப்பூசை வேளைகளிலும் மங்கள இசையான நாதஸ்வரமும் சங்கும் ஒலிக்கப்படுவதன்றி தினமும் மாலை (சாயரட்சை)ப் பூசையின் பின்னர் முருகன், வள்ளி தெய்வயானை சமேதராய் உள்வீதியில் வலம் வருவார். அடியார்கள் பின்னால் திருமுறைகளையும் நாமாவளிகளையும் தாளத்துடன் ஓதிப் பின் தொடர்ந்து வருவார்கள்.

தமிழ் ஆவணி மாதத்தில் அமாவாசையில் கந்தனின் தீர்த்தத் திருவிழா இவ்வாலயத்தில் நடைபெறுகிறது. அதாவது, வருடாந்தர விழாக்கள் 24 நாட்கள் நடைபெற்றபின்னர் இறுதி நாளான 25வது நாளே தீர்த்த விழாவாகும். இடையில் வரும் பத்தாம் விழாவில் அழகிய மஞ்சமும், கார்த்திகை நட்சத்திர விழாவில் பூஞ்சப்பரமும், 18ஆம் நாளில் கைலாச வாகனமும், 24ம் நாள் தேரோட்டமும் இடம் பெறுகின்றன. தேர், தீர்த்த விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பு நேர்முகவர்ணனை மூலம் ஒலி பரப்பும்.

இலங்கையின் எல்லா பாகத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் சைவ அடியார்கள் யின ... படை... கோயிலும், சுற்றுப்புற... கப்படும். கடைகளும் உணவு வி... லுக்குச் சற்றுத் தொலைவிலேயே... கின்றன. நல்லூர்க் கந்தசுவாமி ... அகத் தூய்மையும், புறத்தூய்மையு... மன்றி காலக்கிரமத்தில் ஒரு நிமி... தவறாமல் நிகழ்ச்சிகள் நடைபெறு... சாங்க உத்தியோகத்தரும் பாடசா... வரும் குறித்த நேரத்தில் சென்று பூ... பார்ப்பதற்கும் வசதியாக அமைந்துள்...

நவீன மின்சார தீபங்கள் ஆல... பொருத்தப்பட்டிருந்தாலும், பாரம்ப... பித்தளை விளக்குகளும் (நூற்... கானவை) மிகப் பொலிவுடன் ... மேலும் நிவேதனமாக வைக்கப்ப... மிகத்தூய்மையான வெள்ளிப்... தனித்தனியாக வைக்கப்பட்டு ... துடன் ஒவ்வொரு மூர்த்திக்கும் ... வைபவம் முக்கியமாக இவ்வால... படுகிறது. இலங்கையில் கதிர்... ஆலயம் சிறந்த முருக பக்தரா... நாதரால் திருப்புகழில் பாடப்...

''இறவாமல் பிறவாமல் எனைய...
குருவாகி
பிறவாத்திரமான பெருவாழ்வைத்
தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே
சற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்
பெருமானே''

ஆனால் 1958ல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின்பு அநேக தமிழ் மக்கள் கதிர்காமம் செல்லமுடியாதிருந்தபோது கதிர்காமப்பூசைகளும் நல்லூர்க் கந்தன் ஆலயத்திலே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

''முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே-ஒருகைமுகன்
தம்பியே உன்னுடைய தண்டைக்கால்
எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் யான்''.

—சுபம்—

விருவரின் செயலைக் கண்ணுற்ற பிரமதேவன் ''பூமியில் மானிடராய் பிறக்கக் கடவீர்'' எனக் கொடுத்த சாபத்தால், வருணன் சந்தனு மன்னனாகப் பிறந்தான்., கங்காதேவியும் கங்கை என்ற பெயரில் பூமியில் மங்கையாகத் தோன்றினாள். சந்தனு மன்னன் ஒருநாள் வேட்டைக்குப் போன போது, கங்கா நதிக்கரையில் கங்கையைக் கண்டு காதல் கொண்டான். கங்கையை மணக்க விழைவதாகச் சந்தனு தன் விருப்பத்தைத் தெரிவிக்க, கங்கையும் அவளை மணக்க உடன்பட்டு ஒரு நிபந்தனை விதித்தாள். ''திருமணத்திற்குப் பிறகு நான் எத்தகைய கொடிய செயலைச் செய்தாலும் கூட, அதை ஏன் எதற்காக செய்கிறாய் என என்னிடம் கேட்பதில்லை என்று சத்தியம் செய்து தருவாய் ஆனால் உன்னை மணப்பேன்., என்றைக்கு நீ என்னுடைய எந்தவொரு செயலைய்யும் தடுத்து, அதற்கான காரணத்தையும் கேட்கிறாயோ அன்றைக்கே நான் உன்னை விட்டு நீங்கிவிடுவேன்! இதற்குச் சம்மதமானால் மட்டுமே உன்னை நான் திருமணம் செய்து கொள்வேன்'' என்பதாகக் கங்கை கூற சந்தனுவும் கங்கையின் மேல் கொண்ட எல்லையற்ற காதலால் அதற்கு இசைந்து, திருமணம் புரிந்து கொண்டான்.

சந்தனு-கங்கை இல்லறத்தின் பயனாக ஆண் மகவொன்று பிறந்தது., ''குலம் தழைக்க கோமகன் பிறந்தான்'' என்று மன்னனும் மக்களும் மகிழ்ந்திருந்த நேரத்தில் ,கங்கை யானவள் பிறந்த குழந்தையை உடனே தூக்கிச் சென்று, கங்கையாற்றில் அமிழ்த்தி அக்குழந்தையைப் பிறந்தநாளிலேயே கொன்றுவிட்டாள்., இவ்வாறு முதல் குழந்தையைக் கொன்றதோடு நில்லாமல் இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழாவதாகப் பிறந்த குழந்தை எல்லாவற்றையுமே கங்கையாற்றில் மூழ்கடித்துப் பிறந்த சற்றுநேரத்தில் எல்லாம் கொன்றுவிட்டாள். எட்டாவது குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையையும் கொல்வதற்காகக் கங்கை தூக்கிச் சென்றபொழுது, சந்தனுமன்னன் முன் தான் அவளுக்குச் செய்து கொடுத்திருந்த சத்தியத்தையும் மீறி ''நீ யார்? பெண்ணா பேயா? ஏழு குழந்தைகளைக் கொன்று தீர்த்த நீ அரக்கியும் தானோ? நீ யாராயினும், இக்குழந்தையைக் கொல்ல அனுமதிக்கமாட்டேன்., எதற்காக இப்படி எல்லாம் நடந்து கொள்கிறாய்?'' என்று கங்கையைத் தடுத்துக் காரணத்தை வினவியபோது தான், முன்கூறப்பட்ட பிரமதேவன் மற்றும் வசிட்ட மகிரிஷியின் சாப வரலாறுகளை எல்லாம் சந்தனு மன்னனிடம் கங்கை எடுத்துக்கூறி ''பிரபாஷன் என்ற தேவனே இப்பொழுது என் வயிற்றில் பிறந்த இந்த எட்டாவது குழந்தை'' என்ற விவரத்தையும்தெரிவித்தாள்.

கங்கை, திருமணத்திற்கு முன்பு சந்தனு மன்னனிடம் விதித்திருந்த நிபந்தனையின்படியே தன் செயலைத் தட்டிக் கேட்டுவிட்ட மன்னனுடன் தான் இனி சேர்ந்து வாழ இயலாதென்பதையும் தெரிவித்து, தன்னுடைய எட்டாவது குழந்தையைச் சிறிதுகாலம் தானே வளர்த்துப் பின் வேந்தனிடம் ஒப்படைப்பதாக உறுதியும் கூறிக் குழந்தையுடன் கங்கையாற்றிற்குள் மாயமாக மறைந்து போனாள். மகனுடன் மறைந்த கங்கை ''தேவவிரதன்'' என்ற பெயரை அவனுக்கு இட்டு, யாருடைய சாபத்தால் அவன் பூமியில் பிறக்க நேர்ந்ததோ அதே வசிட்ட மகரிஷியிடம் அறிவு நூல் பயிற்சியும், பரசுராமரிடம் அத்திரப் பயிற்சியும் அளித்து அவனை வாலிபனாக்கிப்பின் மறுபடியும் சந்தனுமன்னனிடமே கொண்டு வந்து ஒப்படைத்தாள்.

''வேந்தகேள் இவனுன் மதலையே தேவ
விரதன் என்றிவன் பெயர்பல்லோர்
ஆய்ந்த நூல் வெள்ளம் கடந்தனன் கரைகண்
டருந்ததிபதி திருவருளால்
பூந்துழாய் மாலைப்போர் மழுப்படையோன்
பொன்னடி பொலிவுற வணங்கி
ஏந்துநீள் சிலையும் பலகணை மறையும்
ஏனைய படைகளும் பயின்றான்'''

(குருகுலச்சருக்கம், 87)

என்றுகூறி, கங்கை தேவவிரதனைச் சந்தனுவிடம் ஒப்படைத்துத் தான் பூமியில் வாழ்ந்து கழித்தாக வேண்டிய காலக் கெடு தீர்ந்து போனபடியால் மறுபடியும் அமராபதிக்கே சென்று சேர்ந்து விடுகிறாள்.

கங்காதேவியால் தெரிவிக்கப்பட்ட இந்த வரலாறுகளின் படி பிரபாஷன் என்ற தேவனே, தேவவிரதனாகப் பூமியில் பிறந்திருப்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். இந்தத் தேவவிரதனே தன் தந்தையான சந்தனுமன்னன் மீண்டும் யோசனகந்தி என்ற செம்படவர் குலத்தில் தோன்றிய மங்கை ஒருத்தியின் மேல் மையல் கொள்ள, அவளைத்தன் தந்தைக்கு மணமுடித்து வைக்கும் பொருட்டு, யோசனகந்தியின் பெற்றோர் விதித்த நிபந்தனைகளுக்கெலாம் உடன்பட்டு ''யோசனகந்திக்குப் பிறக்கும் மக்களே மகுடம் பூணுவர். நான் எனக்குரிய அரசுரிமையைத் தியாகம் செய்து விட்டேன். நான் திருமணம் செய்து கொண்டால், என்மக்கள் வருங் காலத்தில் அரசுரிமையைக் கேட்டலும் கூடும் என்பதால், நான் ஆயுள் முழுவதும் திருமணமே செய்து கொள்ளாமல் பிரம்மச்சரியம் பூண்டு நிற்பேன்'' என்று சத்தியம் செய்து தந்து, 'செயற்கரிய சத்தியம் செய்து தந்தவன்'' என்ற பொருளில் -'வீடுமன்' என விண்ணோரும் மண்ணோரும் வாழ்த்தி வழங்கிய சிறப்புப் பெயரையே பின் தம் பெயராகக் கொள்ளுவதைக் காணுகிறோம்.

இவ்வாறு முற்பிறப்பில் பிரபாஷன் என்ற தேவனாக வாழ்ந்திருந்தவர் வீடுமர் என்பதனாலேயே ''இனம் இனத்தோடு சேரும்'' என்ற பழமொழிக்கேற்ப, தேவர்கள் சுவேதனை வஞ்சனையால் வெல்லுமாறு வீடுமருக்கு ஆலோசனை கூறுகிறார்கள். முற்பிறவியில் மனைவியின் தீய ஆலோசனையால் காமதேனுப் பசுவைக் கவர்ந்து சாபத்துக்காளான வீடுமரே, இப்பிறவியிலும் தேவர்கள் சிலரின் தீய ஆலோசனைக்கிணங்கித் தீராத பழிக்கு ஆளாகப் போவதை இனிக் காணப்போகிறோம். ''சுவேதா! உனக்கு வில்வித்தை ஒன்றுதான் தெரியுமோ? இரண்டுமுறை என்னுடையவில்லை முறித்து விட்டாய் என்ற மமதையில் இருப்பவனே! உனக்கு வீரம் இருந்தால் வாளெடுத்து வந்து என்னோடு மோதி உன் ஆற்றலைக் காட்டு பார்க்கலாம்". வீடுமர் இவ்வாறு கூற, மாபெரும் வீரனும், வாள்வலிமையிலும் வல்லவனான சுவேதன், வீடுமர் விரும்பியவாறே தன்னுடைய வாள்வலிமையைக் காட்ட விரும்புகின்றான். சிவபெருமானால் அளிக்கப் பெற்ற வில்லினைத் தேரிலே வைத்து விட்டு வாள், ஒன்றை ஏந்தியவனாக ''வீடுமரே வாரும்! வந்து என் வாளாற்றலையும் பாரும்!'' என்பதாகக் கூறித் தேரிலே இருந்து குதிக்கின்றான் சுவேதன்.

வலக்கையில் வாளேந்தி, சுவேதன் வீடுமரை நெருங்கி வர, வீடுமரோ தாமும் வாளெடுத்துப் போர் புரிவதற்குப் பதிலாக, புதிய வில்லொன்றை எடுத்து, அதிலே கணையினைப் பூட்டி, சுவேதன் மேல் தொடுத்து, அவனுடைய வாளேந்திய வலக்கையைக் கொய்து வீழ்த்துகிறார் என்றால் அந்தக் கொடுமையை என்ன வென்று சொல்லுவ...

னுடைய வலக்கை அற்று வீழ்ந்ததோ அல்லது வீடு மரின் வீரமும் புகழுமே அற்று வீழ்ந்ததோ என்ப தாக எண்ணிச் சுவேதன் ஒருநொடி நேரம் திகைத்து நிற்கிறான். ''வலக்கை போனால் என்ன? இடக்கை இருக்கிறதே! இடதுகையினாலேயே வீடுமருக்கு வாள் வீரத்தைக் காட்டலாம்.'' என்பதாக எண்ணி இடக்கையினால் வாளினை மீண்டும் எடுத்துக் கொண்டு, வீடுமரை நோக்கிப் பாய்கிறான் சுவே தன். அப்பொழுதேனும் வீடுமர் வில்லை விடுத்து வாளெடுத்து வந்து, சுவேதனுடன் பொருதாரா என்றால் இல்லை. மீண்டும் மீண்டும் சுவேதன் மேல் அம்புகளையே ஏவிடும் வீடுமர், சுவேதனின் ஆருயிரையும் அநியாயமாகப் பறித்துக் கொள் கிறார்.

''எடுத்தவடி வாளினொடு எண்ணில் பலபாணம்
தொடுத்துவரு வீடுமனை மாமுடி துணிப்பான்
அடுத்துவரு போதவன் அழன்றொருசரத்தால்
நடுத்தகை உறாமல்அவன் நல்லுயிர்கவர்ந்
தான்''
(முதற்போர்ச் சருக்கம்.,68)

இவ்வாறு வஞ்சகத்தால் சுவேதனுடைய நல்லுயிரை வீடுமர் கவர்ந்து, அவர்மேல் பலரும் கொண்டிருக் கும் பெருமதிப்பைப் பாழாக்கிக் கொள்கிறார். தம்பி உத்திரனைக் கொன்ற சல்லியனைப் பழி தீர்க்க முற்பட்ட சுவேதன், தன்னுடைய முயற்சி யில் தோற்று, வீடுமரின் வஞ்சகத்திற்குத் தன் ஆரு யிரையும் பறிகொடுத்த சோகத்தோடு முதல்நாள் போர் இவ்வாறு நிறைவுபெறுகிறது. முற்பகல் போரில் உத்தரனையும், பிற்பகல் போரில் சுவேத னையும் பலி கொடுத்த பாண்டவர்களுக்கு முதல் நாள் போர் தோல்வியையே தந்தது என்றாலும், ''தருமத்தின் வாழ்வதனை சூது கவ்வும்., தருமம் வெல்லும்'' என்பதை இனிவரும் போர்களில் நாம் பொறுத்திருந்து பார்க்கத்தானே போகிறோம்.

(தொடரும்)

---

# வாசகர் எண்ணங்கள்



திருக்கோயில் இதழை அலங்கரித்த தமிழ்த்தாயின் திருவுருவத்தைக் கண்களில் ஒற்றிக் கொண்டேன். தமிழ்த்தாய்க்கு உலகத் தமிழ்ச் சங்கம் கண்ட பொன்மனச் செம்மல் டாக்டர் தமிழக முதல்வரின் செயல் பொன் னெழுத்துக்களில் பொறித்துப் பாராட்டத் தக்கது. ''உலகத் தமிழ்ச் சங்கம் கண்ட உயர் குண முதல்வர்'' கவிதை மிக அருமை.

—அருட்செல்வி, சென்னை-5.

—o—

தற்போது தமிழகத் திருக்கோயில் ...ின் வரலாற்றில் ஒரு திருப்பம் ஏற்பட் ...து. பல ஆண்டுகளாக வருமானம் ...ாமல் பூஜை செய்ய வழியின்றி அடைக் ...படும் நிலையில் இருந்த திருக்கோயில் ...க்கு நிதி உதவி வழங்கி பூஜை தொடர்ந்து ...பெற ''ஆலய மேம்பாட்டுத் திட்டம்'' ஏற்படுத்தப்பட்ட செயல் பாராட்டிற்குரியது. மேலும் கிராமக் கோயில்கள் திருப்பணிக்கு நிதி வழங்கியும், திருக்கோயில் பணியாளர்களுக்கு மருத்துவம் மற்றும் கல்வி நிதிகளை வழங்கிச் சம்பளப் பாக்கியைப் பைசல் செய்தும் அற நிலையத் துறை ஆற்றிவரும் பணி மிகச்சிறந்த பணியாகும். இப்படிப்பட்ட அதி உன்னத திட் டங்களை ஏற்படுத்தி இந்துமதம் தழைக்கப் புத்துயிர் ஊட்டும் அரசையும் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் பெருமானை யும் பாராட்ட வார்த்தைகளே இல்லை. தமிழக வரலாற்றிலேயே மாண்புமிகு இராம வீரப்பன் அவர்கள் அறநிலையத்துறை அமைச்சராக இருக்கும் காலமே ''இந்து மதத்தின் பொற்காலம்'' என்பது மறுக்க முடியாத உண்மை. இந்துமதம் மென்மேலும் தழைக்கவும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களது பணி சிறக்கவும் ஆண்டவன் அருள் புரியட்டும்.

—பொய்கை நாராயணசாமி,
தெற்குப் பொய்கை நல்லூர்,
நாகப்பட்டினம்.

—o—

அருமையான பல கருத்துக்களோடும், தகவல்களோடும் புனிதமான ஏடாகத் ''திருச் கோயில்'' இதழ் வெளிவந்து கொண்டு இருச் கிறது. என்னுடைய பாராட்டுதல்களைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

—வித்துவான் வே. லட்சுமணன்,
109 ஜி. என். செட்டி ரோடு,
சென்னை—600 017.

—o—

''பாரதப் போரில் பார்த்தசாரதி'' என்ற மகுடமிட்ட தங்கள் கட்டுரையை வாசித்து மகிழ்ந்தேன்.

—என். வேணுகோபால் நாயகர்,
பி.ஏ. பி.எல்.
செயலாளர்,
ஸ்ரீவைணவ மகாசங்கம்,
சென்னை—1.

# பாரதப் போரில் பார்த்தசாரதி



டாக்டர்

த. அமிர்தலிங்கம்

எல்லோரும் வாழவேண்டும் என்ற நல்ல எண்ணம் எல்லோருக்கும் இருந்து விடுமானால், உலகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்துவிடும் என்பதில் யாருக்கும் எந்த ஐயமும் இருக்க முடியாது. ஆனால் துரியோதனனைப் போன்ற மனிதாபிமானமே சிறிதும் இல்லாத கொடியவர்கள் குடியிருக்கும் உலகில் போர் என்ற ஒன்று நிகழாமல் இறைவனாலும் கூடத் தடுத்துவிட முடியாது என்பதைத்தான் நாம் மகாபாரதக் காவியத்தின் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

தன் சிற்றப்பாவின் மக்களான பாண்டர்கள் பூமியிலே தோன்றியே இருக்கக்கூடாது என்பது துரியோதனனின் எண்ணம். அவன், பாண்டவர்களுக்கு அடுக்கடுக்காகச் செய்திருக்கும் அநீதிகளுக்கு அளவே இல்லை. துரியோதனன், தன்னிலும் வலியவனாக வீமன் சிறப்புப் பெறுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், அவனுடைய பாலப் பருவத்திலேயே ஆற்றிலே கழுமரங்களை நட்டு வைத்து, அதிலே வீமனைக் குதிக்கச்சொல்லி வீமனுடைய உயிர் பறிக்க முயன்று, அந்த முயற்சியிலே தோற்றான். கண்ண பெருமான் வண்டுகளின் வடிவம் தாங்கிக் கழுமரங்கள் தோறும் போய் அமர்ந்து, அங்கே உள்ள ஆபத்தை வீமனுக்கு உணர்த்திய காரணத்தினாலே, ஆற்றின் வேறு பக்கமாகக் குதித்து வீமன் உயிர் தப்பினான்.

வீமன் ஒருவனைக் கொல்லக் குறி வைத்து அம்முயற்சியில் இவ்வாறு தோற்றுப்போன, துரியோதனன், பாண்டவர்கள் ஐவரையுமே பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டு அரக்கு மாளிகை ஒன்றை அமைத்து, விருந்துக்குப் பாண்டவர்களை அழைத்து, அவர்கள் உறங்குகின்ற வேளையிலே தீயிட்டுப் பொசுக்க முயன்றான். ஆனால் விதுரர் துரியோதனனின் வஞ்சகத் திட்டத்தை வீமனுக்கு உரிய நேரத்தில் தக்க ஆள் மூலம் எடுத்துரைத்து எச்சரித்த காரணத்தினாலே பாண்டவர்கள் அந்த ஆபத்திலிருந்தும் தப்பிப் பிழைத்துக் கொண்டார்கள்.

இனி துரியோதனன் கண் எதிரில் வாழ்ந்தாலும் தம்மைக் கொல்வதிலேயே பாவி துரியோதனன் குறியாக இருப்பான் என்பதனால் தான், அரக்கு மாளிகைச் சம்பவத்திற்குப் பிறகு பாண்டவர்கள் மாறு வேடத்திலேயே மறைந்து வாழ்ந்தார்கள். அந்த வேளையில் அர்ச்சுனனுக்குமணம் முடித்துக் கொடுப்பதற்கென்றே துருபதராசன் பெற்ற துரோபதையின் சுயம்வர நிகழ்ச்சி வந்தது.

கண்ணபெருமானின் ஏவலுக்கிணங்க அர்ச்சுனன் தன்னை இன்னான் என்று காட்டிக் கொள்ளாமலேயே, சுயம்வரப் போட்டியிலே கலந்து கொண்டு தன்னுடைய வில் திறமையைக் காட்டி வென்றான். வென்றவன் அர்ச்சுனனாகவே இருக்க முடியும் என்று ஐயப்பட்ட துரியோதனன், அந்த நேரத்திலும் சுயம்வரத்திற்கு வந்திருந்த கர்ணன் உள்ளிட்ட பல தேசத்து அரசர்களையும் தூண்டிவிட்டு அர்ச்சுனனைக் கொல்ல முயன்றான். ஆனால் அர்ச்சுனனும் வீமனுமாக இணைந்து தங்கள் வீர பராக்கிரமத்தைக் காட்டி தாங்கள் வென்றதோடு மட்டுமல்லாமல் துரியோதனனின் அரக்கு மாளிகை சூழ்ச்சியையும் அம்பலப்படுத்தினார்கள். அதன் பிறகுதான் பாண்டவர்களுக்குரிய குரு நாட்டுரிமையை வழங்கியாக வேண்டிய கட்[illegible]ாயத்தின பேரில், திருதராட்டிரன் தருமனுக்கு [illegible] வரசுப் பட்டம் கட்டினார். ஆனால் அதைப் [illegible]பாறுக்க முடியாமல் துரியோதனன் பொறாமை கொண்டு, தன் புகைச்சலைக் காட்ட, அத்தினாபுரத்தில் இனித் தாம் தங்கியிருக்க வேண்டாம் எனக் கருதிப் பாண்டவர்கள் இந்திரப் பிரத்தம் என்ற புதிய நகரையே நிர்மாணித்து அங்கே தங்கி வாழ்ந்து வந்தார்கள்.

அப்போதுதான் இந்திரபிரத்த நகருக்கு வருகை புரிந்த மகரிஷி நாரதர், சொர்க்கத்தில் வாழும் பாண்டவர்களின் தந்தை பாண்டு, தம் மைந்தர்கள் இராஜசூய யாகத்தை நிகழ்த்தவேண்டும் என்று விரும்பியதைத் தருமரிடத்தில் தெரிவிக்க, கண்ணபெருமானின் திருவருளால், உலகம் போற்ற அவர்களும் மிகச் சிறப்பாக யாகத்தைச் செய்து முடித்தார்கள். அந்த யாகத்திற்கு வருகை புரிந்து, பாண்டவர்களின் இந்திரபிரத்த நகரின் சிறப்பையும், அவர்கள் நிகழ்த்திய யாகத்தி[illegible] சிறப்பையும் நேரில் கண்டு, பொறாமையால் மனம் நொந்து வெந்த துரியோதனன், பாண்டவர்களை எப்படியும் இனி வாழ விடாமல், கெடுத்தே ஆக வேண்டும் என்று சகுனியின் உதவியோடு சதித் திட்டம் தீட்டி, தாமும் புதிதாக ஒரு மண்டபத்தை அத்தினாபுரத்தில் அமைத்து அதைக் காண பாண்டவர்களை வரவழைத்து ''வி[illegible] முன் சூதாடலாமே'' என விநயமாகத் [illegible] அழைத்தான்.

சூதாட்டம் எவ்[illegible] தரும நெறி தழை[illegible] றாகவே அறி[illegible] [illegible]வர்.



படர்ந்த கானகம் திரிந்து மீண்டன்புடன் பணிந்த பஞ்சவர்க்காகக்

கடந்த ஞானியர் கடவுளர் காண்கலாக் கழலிணை சிவப்பேறத்

தொடர்ந்த நான்மறை பின்செலப் பன்னகதுவசன் மாநகர்த் தூது

நடந்த நாயகன் கருமுகில் வண்ணமென் நயனம் விட்டக லாதே.

(படை எழுச்சிச் சருக்கம், கடவுள் வாழ்த்து)



# அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## பழநி, அண்ணா மாவட்டம், தமிழ்நாடு.

பழநியில் அமைந்துள்ள இத்திருக்கோயில் மிகப்புராதனமானது. பொதுவாக ஏனைய திருக்கோயில்களிலுள்ள மூலவர் சிலை அனைத்தும் கல்லினால் படைக்கப்பட்டிருக்கும். ஆனால் இத்திருக்கோயிலுள்ள மூலவரோ ஒன்பது வகையான பாஷாணங்களின் கலவையிலான சிலையாகும். இது சித்தர் போகரால் செய்து வைக்கப்பட்டது.

மிகப் பழங்காலத்திலிருந்தே இத்திருக்கோயில் அரசர்களின் ஆதரவையும் பெற்றிருந்தது. முனிவர்களும் தவம் இயற்றியுள்ளனர். ஞானிகளாலும் போற்றிப் பாடப்பட்டுள்ளது. இங்கு மூலவர் மேற்கு நோக்கி தண்டம் ஏந்தி நின்று காட்சித் தருவது பிற திருத்தலங்களினின்று சிறப்பம்சம் பெற்ற ஒன்றாகும்.

யாத்திரிகர்கள் வசதியாக தங்கிச் செல்ல 300 அறைகள் கொண்ட விடுதிகளும், சத்திரங்களும், சிறு குடில்களும், குளுகுளு வசதி செய்யப்பட்ட அறைகளும் குறைந்த வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன.

தரிசனம் சாதாரண நாட்களில் தினமும் காலை 6.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை இடைவேளையின்றி சந்நிதி தரிசனத்திற்காகத் திறந்திருக்கும். கிருத்திகை மற்றும் முக்கிய பெருவிழா நாட்களில் காலை 4.00 மணிக்கு நடை திறக்கப்படும்.

**பூஜை நேரங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| விஸ்வரூப தரிசனம் | ... | காலை | 6.00 மணி |
| விளா பூஜை | ... | காலை | 6.45 மணி |
| சிறுகால சந்தி | ... | காலை | 8.00 மணி |
| காலசந்தி | ... | காலை | 9.00 மணி |
| உச்சிக்காலம் | ... | பிற்பகல் | 12.00 மணி |
| சாயரட்சை | ... | மாலை | 5.30 மணி |
| இராக்காலம் | ... | இரவு | 8.00 மணி |

**இத்திருக்கோயிலின் முக்கிய திருவிழாக்கள்:**

1. வைகாசி விசாகம் 2. ஸ்கந்த சஷ்டி 3. பெரிய கார்த்திகை 4. தைப்பூசம் 5. பங்குனி உத்திரம் (வருடாந்திர பெருவிழா)

யாத்திரிகர்களின் பாதமும் மனமும் நோகாவண்ணம் மலைக்கோயிலுக்கு சென்றுவர இரண்டு மின் இழுவை ரயில்களும் விடப்பட்டுள்ளன. மூன்றாவது இழுவை ரயில் போடப்பட்டு வருகிறது.


**சேவைக் கட்டணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. தங்கரதம் | ... | ரூ. | 900.00 |
| 2. தங்கமயில்வாகனம் | ... | ரூ. | 200.00 |

பழநி வாருங்கள்! பாலனைக் காணுங்கள்! அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் திருவருளை பெற்றுச் செல்லுங்கள். விழாப்பொலிவினை கண்டு களியுங்கள்.

**கே. எஸ். சோமசுந்தரம்,** பி.ஏ.பி.எல்.,
துணை ஆணையர்-நிர்வாக அதிகாரி
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பழநி,
தொலைபேசி எண்: 236 (அலுவலகம்)

**க. பொன்னுச்சாமி,** பி.எஸ்.ஸி.,
தக்கார்.



உலகத் தமிழ்ச்சங்கத் தொடக்கவிழாவை ஒட்டி மதுரைக்கு வருகை புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வெள்ளியில் செய்யப்பட்ட மீனாட்சி திருக்கல்யாணத் திருவுருவச் சிலையை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் தக்கார் திரு வி. என். சிதம்பரம் அவர்களும், அருள்மிகு கூடலழகர் திருக்கோயில் தக்கார் திரு சி. தங்கராசன் அவர்களும் இணைந்து வழங்குகின்றனர்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.